SAMARASAM

# சமரசம்

மாதம் இருமுறை இதழ்

1-15 ஜூலை 2026 ₹25

Volume : 47 Issue : 02

www.samarasam.net

## இனி ஒரு போபால் வேண்டாம்

## ஜவஹர்லால் நேருவும் நரேந்திர மோடியும்



# நல்லறங்களும் சமுதாய மறுமலர்ச்சியும்

TRADITIONAL TRUST SINCE 1925

LKS

100 YEARS

பசித்தவனுக்கு உணவளிப்பது
மிகச் சிறந்த தர்மமாகும்.

– முஹம்மத் நபி (ஸல்) அவர்கள்

கதீட்ரல் ரோடு

L.K.S.

கோல்டு பேரடைஸ்

35. கதீட்ரல் ரோடு, சென்னை – 600 086.
போன் : (044) 2811 3611




## உள்ளே...


8 ● சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி
நல்லறங்களும் சமுதாய மறுமலர்ச்சியும்

● கடிதங்கள் ● திருக்குர்ஆன் விரிவுரை ● நபிமொழி விளக்கம் ● புதிர் போட்டி ● நாவல்

7 இனி ஒரு போபால் வேண்டாம் | தலையங்கம்

13 அப்பா..! நீங்கள் எங்கள் நாயகன் எங்கள் துருவ நட்சத்திரம் | ஆகாஷி சாந்தனு

17 இதயம் காப்போம்! | S. சுஹைல் அஹ்மத்

20 தனியாக நீ துணையாக யார்? | அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

22 ஜவஹர்லால் நேருவும் நரேந்திர மோடியும் | சேயன் இப்ராகிம்

29 வாழ்க்கையின் இலட்சியம் | சே. முஹம்மத் ஷகீல்

32 இன்றைய அரசியலும் வரலாற்றுப் படிப்பினைகளும் | மௌலவி முஹம்மது யூசுஃப் அன்சாரி கலீமி

36 அமெரிக்க மண்ணில் ஈரான் விளையாட்டு வீரர்கள் | அப்துல் சத்தார்

38 சிறுகதை : கரும்பன் கோகுல் | S. நஸ்ரத் ரோஸி

44 கவிதை : நினைப்பவனும் மறப்பவனும் | ஆரூர் புதியவன்

49 சிறார் உலகம் : சூளுரை செய்வோம்! | கே.வி. பத்மநாபன்

50 திருமண மஹராக 313 அறுவை சிகிச்சை | ஹக்கீம் யாஸினி



ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*

**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு*
*விளம்பரத் தொடர்புக்கு :*

**M.அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*

**samarasam.advt@gmail.com**

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

*கடிதங்கள், படைப்புகள்*
*அனுப்ப வேண்டிய முகவரி:*

பொறுப்பாசிரியர்,
சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net

### ● எல்லா மஹல்லாக்களும் இப்படி இருந்தால்..!

முன்மாதிரி மஸ்ஜித் மஹல்லா பற்றிய சொற்பொழிவு முழுவதும் தேனில் ஊறிய பலாச்சுளை போல் இனித்தது. நம் முன்னோர்களின் சாதனைகளைப் படிக்கப் படிக்க மெய்சிலிர்க்கிறது. எப்படி இருந்த முஸ்லிம் சமுதாயம் இப்படியாகி விட்டது என்று நினைக்கவே உள்ளம் கவலையால் வருந்தியது. அட்டைப் படத்தில் உள்ளது போல மஸ்ஜிதும் மதரஸாவும் கல்வி, மருத்துவ மையங்களுடன் எல்லா மஸ்ஜிதுகளும் இருந்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும். குடும்பத் தலைவியான மனைவியை எப்படி அனுசரித்து, அரவணைத்து நடத்துவதைக் குறித்த வழிகாட்டல்கள் வெகு அருமை. ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழு உதயமானது தமிழக மக்களுக்கு நல்ல செய்தி.

– S.A. சபீர் அஹ்மத், ஆணைக்காரன்சத்திரம்

### ● வியப்பளிக்கும் இஸ்லாம்

நஜ்முத்தீன் எழுதிய கட்டுரையில் பெண்களின் திறமைகளை சதுரங்க விளையாட்டுடன் ஒப்பிட்ட விதம் அருமை. காதல் குறித்த நபி(ஸல்) அவர்களின் 10 வழிமுறைகள் பெண்மைக்கு பெருமை சேர்ப்பவை. குர்ஆன் கூறும் அறிவியல் சிந்தனைகள் இஸ்லாத்திற்குக் கிடைத்த அருட்கொடைகள். 1400 ஆண்டுகளுக்கு முன்னரே கூறப்பட்ட செய்திகள் வியப்பளிக்கிறது. சிறார் உலகம் பகுதியில் இடம்பெற்ற மகிழ்வித்து வாழ்வோம் பாடல் சிறப்பு.

– சோழா புகழேந்தி, கரியமாணிக்கம்

### ● அற்புதமான கட்டுரை

அபூ ஹம்னாவின் தீமையைத் தடுக்கும் வழிமுறை அற்புதமான கட்டுரை. மிகவும் தெளிவான கருத்துகள் கவனத்துடன் சொல்லப்பட்டுள்ளன. விஜயின் அரசியல் எப்படி இருக்க வேண்டும் என்ற சமரசத்தின் வழிகாட்டுதல்கள் பிரமாதம். சதுரங்க விளையாட்டு சாமர்த்தியமான கட்டுரை.

– T.M. பெரோஸ்கான், விருத்தாச்சலம்

### ● மாற்றத்தில் முன்னேற்றம்?

உண்மையான காதலுக்கு மரியாதை செய்யும் கட்டுரை சிறப்பு. பணத்தை வாங்கிக் கொண்டும், வாக்குறுதிகளை நம்பியும் வாக்களித்தவர்கள் ஏன் வாக்களித்தோம் என்று புலம்பும் நிலையையும் பார்க்கிறோம். மாற்றத்தில் முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது.

– எம்.எஸ். பாரூக், திருப்பாலத்துறை

### ● வரவேற்கத்தக்க தலையங்கம்

புதிய அரசின் பொறுப்புகளும் கடமைகளும் தலையங்கம் மிக அருமை. சிறுபான்மைக் கட்சிகள் ஆட்சி அதிகாரத்தில் பங்கு பெறுவது வரவேற்கத்தக்கது. மது போதையற்ற மாநிலமாக வேண்டும். தமிழுக்கு




### ● மதுக்கடைகள் குறைகிறதா? அதிகரிக்கிறதா?

புதிய அரசின் பொறுப்புகளும் கடமைகளும் தலையங்கத்தில் கூறியபடி 2217 மதுக்கடைகள் மூடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் உண்மை நிலை என்ன? மதுக்கடைகளை மூடுவது ஒருபுறம் இருக்கட்டும். புதிய கடைகள் திறக்கப்பட்டது எவ்வளவு? மாற்றத்தை எதிர்பார்த்த மக்களுக்கு புதிய அரசு நம்பிக்கை தருவதாக இல்லை.

– N. பாபு அருள் ஜோஷி, களக்காடு

முன்னுரிமை செயலில் வேண்டும். மாநில உரிமைக்கு அரசு பாடுபட வேண்டும். பெண்கள், குழந்தைகள் பாதுகாப்புக்கு சட்டம், ஒழுங்கு நடவடிக்கையில் துரிதம் வேண்டும். முந்தைய அரசின் நலத்திட் டங்கள் தொடர வேண்டும் என்பன போன்ற தலையங்கக் கருத்துகள் வரவேற்கத்தக்கவை. பாராட்டுக்குரியவை.

– கவிஞர் காசீம், கடையநல்லூர்

## அசத்தலான அட்டைப்படம்

அட்டைப்படம் அசத்தல். அழகிய கவிதையாய், இனிய தென்றலாய், மழைத் தூறலாய் கவிஞர் கடல் நாகராசன் கவிதை அருமை. அரிசி ஒன்றே, அதன் பயன்கள் பல என்று வியக்க வைக்கிறார். ஜே.எம். சாலி நினைவலைகளைப் பார்த்தபோது அவரது கனாக் கண்டேன் தோழி நினைவுக்கு வந்தது. சமரசம் இந்த இதழ் புதுமணம்.

– ப.பீர் இலாஹி, உத்தமபாளையம்

## அழகிய அறிவுரை

தேர்தலில் வென்ற முதலமைச்சர் விஜய்க்கு வாழ்த்து தெரிவித்து சிறந்த வழி காட்டுதல்களையும் வழங்கியுள்ளீர்கள். மேடை பகுதியில் மௌலவி ஷேக் அப்துல் காதிர் காஷிஃபி பல சிறப்பான தகவல் களைத் தந்துள்ளார். முஸ்லிம்களின் கண்டு பிடிப்புகள் குறித்த செய்தியை விரிவாகப் பேசியுள்ளார். பலமுறை வாசித்தேன். இலவசங்களுக்கும், காசுக்கு வாக்களிப்பதும் குறித்த அறிவுரை அருமை. இஸ்லாமிய இலக்கிய உலகின் நாயகராகத் திகழ்ந்த ஜே.எம்.சாலியின் வாழ்க்கை முன்னுதாரண மானது.

– இரா.சண்முகவேல், கீழக்கலங்கல்

## மக்களாட்சியாகத் திகழுமா தவெக?

அரசியல் அனுபவமற்ற குழந்தையான தவெக ஆட்சியைப் பிடித்துள்ளது. மக்கள் நல அரசாகச் செயல்பட்டால் அது மக்களாட்சி யாக இருக்கும். இஸ்லாமியப் பெண்களின் கண்ணியத்தைக் குறித்த ரிஃபாயுத்தீன் கட்டுரை சிறப்பு. ஜே.எம்.சாலியின் இழப்பு வருந்த வைத்தது. புதிய தலைமுறை எழுத் தாளர்கள் உருவாக வேண்டும்.

– S. மகுதனன், M. லைலாம்மா,
S. அஜித்தா, தேனி

## பேரிழப்பு

இல்லறம் நல்லறமாக வழங்கப்பட்ட உதாரண விளக்கங்கள் வெகு அருமை. ஜே.எம்.சாலியின் கதைகள், நாவல்கள், கட்டுரைகளை நிறைய வாசித்து இன்புற் றிருக்கின்றேன். என் சமகால மிகப் புகழ் வாய்ந்த எழுத்தாளரான அவரின் இழப்பு பேரிழப்பு.

தீமையைத் தடுக்கும் வழிமுறைகள் நவீன விஞ்ஞான கால கண்டுபிடிப்பு களுடன் சாதிப்பது எப்படி என்பதற்குரிய வழிகாட்டல்கள் மிகப் பயனுள்ளது. இதழுக்கு இதழ் தரமான, மிகத் தேவை யான கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து வழங்கி வரும் சமரசத்தின் பணி பாராட்டுக் குரியது.

–ப.சையத் அஹமத், துளசேந்திரபுரம்

## நம்பிக்கையூட்டும் கவிதை

தமிழ்நாட்டு அரசியலில் 60 ஆண்டு களுக்குப் பிறகு ஒரு பெரும் மாற்றமாக இளைய சமுதாயம் கையில் ஆட்சி சென் றுள்ளது. புதிதாக பதவியேற்ற விஜய், எதிர்க் கட்சித் தலைவர்களைச் சந்தித்து வாழ்த்து பெற்றதையும், திமுக கூட்டணியில் வெற்றி பெற்ற கட்சிகளின் ஆதரவோடு கூட்டணி ஆட்சி அமையப் பெற்றதையும் தலையங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மௌலவி மு.ஷேக் அப்துல் காதிர் காஷிஃபியின் ‘முன்மாதிரி மஸ்ஜித் முன்மாதிரி மஹல்லா’ குறித்த உரை படிப்

பினை மிக்கது. 'தொழுகைக்கு மட்டும்தான் பள்ளிவாசலா?' A.H. யாசிர் அரபாத் ஹசனியின் வழிகாட்டுதல்கள் சிறப்பு. 'வாக்குக்குப் பணமும், அரசின் இலவசங்களும்' தேர்தல் ஊழலை சேயன் இப்ராகிம் தெளிவுபட விளக்கியுள்ளார். ஜே. எம்.சாலி, 'இஸ்லாமிய இலக்கிய உலகின் முத்திரை நாயகன்' தலைப்பிற்குப் பொருத்தமானவர்.

'காதல்: ஓர் இஸ்லாமியப் பார்வை' ரிஃபாயுதீன் புனித குர்ஆன் வழிகாட்டும் காதலை அழகாக எடுத்துரைத்துள்ளார். அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது, புனித குர்ஆன் மூலம் 'தன் கையே தனக்கு உதவி' பாடத்தை மனதில் தங்கும்படி போதித்துள்ளார். சமூக வலைதளங்களில் தீமையைத் தடுக்கும் வழிமுறையை அபூஹம்னா சிறப்பாக விளக்கியுள்ளார். வீட்டில் கணவன், மனைவி ஒருவருக்கொருவர் அகம் (Ego) பார்க்காமல் அமைதியாக வாழ்க்கை நடத்தும் முறையை 'சதுரங்க விளையாட்டு!' தலைப்பில் அ.நஜ்முத்தீன் நயமாக விளக்கியுள்ளார்.

'குர்ஆன் கூறும் அறிவியல் சிந்தனைகள்' தலைப்பில் ஐ.மஹ்பூப் ஜான் புனித குர்ஆன் மார்க்கப் புத்தகம் மட்டுமல்ல, அறிவியலையும் கொண்டது என அறிய வைத்துள்ளார். டாக்டர் அம்ரின் கலீலின் 'சாத்தியமற்றவைகளின் சாத்தியம்' என்ற அழகான கவிதையில் புனித குர்ஆனில் நபிமார்களின் வாழ்வில் நடந்த அசாத்தியங்களை அல்லாஹ்வின் 'குன் ஃபயகூன்' வார்த்தையில் இறைவன் செயலாக்கியது போல், நமக்கும் செயல்படுமென நம்பிக்கை ஊட்டுகிறார். 'தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழு' ஓர் அவசியமான தொடக்கம்.

– நாட்டாம்கார் அமீனுர் ரஹ்மான், ஆம்பூர்

## அரசு பரிசீலிக்குமா?

எழுபது ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்ட தமிழக அரசியல் வரலாறு கூட்டணி ஆட்சி. ஆட்சி அதிகாரத்தில் பாமரனும் அமரலாம் என்னும் அத்தியாயம் எழுதப்பட்டுள்ளது. முடிவுரை எழுதாமல் அதற்கு நாம் வாழ்த்து தெரிவிப்போம். புதிய அரசுக்கு மலை போல் உயர்ந்த வாழ்த்துகளையும், மதிப்பு மிகுந்த நல் ஆலோசனைகளையும் சமரசத்தின் தலையங்கம் வழங்கியதில் மகிழ்ச்சி. அரசு இதனை பரிசீலிக்கும் என நம்பலாம்.

தமிழ்நாட்டின் ஃபாசிஸப் புற்று துடைத்தெறியப்பட்டு விட்டது. புதிய குப்பியில் மீண்டும் வரலாம். நாம் கவனமாக இருந்தாலே போதும். சமரசத்தின் எல்லா கட்டுரைகளும் சிந்திக்க வைத்தது. ஜே.எம். சாலி முன்னணி எழுத் தாளர்களுடன் சேர்த்து மிகவும் அதிசயமாகப் பார்க்கப்பட்டவர். அவர் இறப்பு வருத்தமளிக்கிறது.

– அ. சாகுல் ஹமீது, குளச்சல்

## அழகிய அறிவுரை

ஜூன் 1-15 இதழ் அட்டை முதல் கடைசிப் பக்கம் வரை அனைத்து கட்டுரைகளும் திரும்பத் திரும்பப் படிக்கத் தூண்டுபவையாய் இருந்தது. முன்மாதிரி மஸ்ஜித் முன்மாதிரி முஹல்லா மௌலவி. மு.அப்துல் காதர் காஷிஃபி அவர்களின் உரை ஒவ்வொரு பள்ளிவாசல் நிர்வாகிகளும் ஏற்று செயல்படுவதற்கான அழகிய அறிவுரையாக இருந்தது.

J.M. சாலி அவர்களின் கதைகள் சிறு வயதில் நிறைய படித்துள்ளேன். நல்ல எழுத்தாளரை இழந்து விட்டோம். அல்லாஹ் அவருடைய மறுமை வாழ்வை சிறப்பித்துத் தருவானாக!

சமூக வலைதளங்கள் மூலம் தீமையைத் தடுக்கும் வழிமுறை கட்டுரை ஹதீஸ்களின் அடிப்படையில் நல்லதொரு வழிகாட்டுதலாக இருந்தது.

– S. நஜ்மா, மதுரை

சரம் : 47
மலர் : 02

وَقُولُوا قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

1448 முஹர்ரம் 15-29 ● 2026 ஜூலை 1-15

# இனி ஒரு போபால் வேண்டாம்

திருவள்ளூர் மாவட்டம் கன்னிகைப்பேர் கிராமத்திலுள்ள செயின்ட் பீட்டர் அண்ட் பால் கடல் உணவு ஏற்றுமதி நிறுவனத்தில் ஜூன் 21ஆம் நாள் ஏற்பட்ட அமோனியா வாயு கசிவால் ஒடிசாவைச் சேர்ந்த 11 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். 67 பேர் படுகாயமடைந்தனர். அதில் 27 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இறால் உள்ளிட்ட கடல் உணவுப் பொருள்களைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் இந்த நிறுவனத்தில் அசாம், ஜார்க்கண்ட், ஒடிசா மாநிலங்களைச் சேர்ந்த சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். குழந்தைத் தொழிலாளர்களும் பணியில் ஈடு படுத்தப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து அங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொழிற்சாலைக்கு அருகிலேயே அமோனியா வாயுக் குழாய்கள் அமைந்துள்ள பகுதிகளில் மிகவும் நெருக்கடியான சூழலில் தொழிலாளர்கள் தங்க வைக்கப்பட்டிருந்ததால் வாயு கசிவு ஏற்பட்ட போது தப்பிச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தொழிலாளர்கள் குறித்த முழுமை யான பதிவுகள் நிறுவனம், அரசு நிர்வாகத்திடம் இல்லாத காரணத்தால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதிலும் தகவல்களைச் சேகரிப்பதிலும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளது என்பது அதிர்ச்சியளிக்கிறது.

தொழிற்சாலைகளில் அவ்வப்போது ஏற்படும் விபத்துகளில் அப்பாவித் தொழிலாளர்கள் பலியாவதும், அருகே வசிக்கும் பொதுமக்கள் பாதிப்படைவதும் தொடர்கதையாகி வருகிறது. அண்மையில் சென்னை எண்ணூரிலுள்ள கோரமண்டல் இன்டர்நேஷனல் லிமிடெட் நிறுவனத் தின் கடலடி குழாயில் ஏற்பட்ட அமோனியா வாயு கசிவு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. சுமார் 67.6 மெட்ரிக் டன் வாயு கசிந்ததால் 25க்கும் மேற்பட்ட கிராம மக்கள் மூச்சுத்திணறல் மயக்கத்தால் பாதிக்கப்பட்டனர்.

தமிழ்நாட்டில் 54,957 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இதில் 27,65,313 தொழி லாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இத்தொழிற்சாலைகளில் 6669 அபாயகரமான தொழிற்சாலைகள் உள்ளன. தனியார் கார்ப்பரேட் முதலாளிகள் முறையான பாதுகாப்பு, விதிகளைப் பேணாமல் தொழி லாளர்கள் விசயத்தில் கவனம் செலுத்தாததால் ஏற்பட்ட விபத்துகளின் எண்ணிக்கை அதிகம்.

இதுபோன்று விபத்து ஏற்படும்போது இழப்பீடு வழங்குவதோடும், பாதுகாப்பு குறித்துப் பேசுவதோடும் முடிந்துவிடுகிறது. பொதுமக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதால் தற்காலிக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதற்கான நிரந்தரத் தீர்வுக்கான வழிமுறைகள் மேற்கொள் ளப்படுவதில்லை. எனவே விபத்துகள் தொடர்கதையாகிறது.

உயிரிழந்த தொழிலாளரின் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்குவதுடன் நின்றுவிடாமல் இத்த கைய தொழிற்சாலைகள் முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு தொழிலாளர்கள் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். பாதுகாப்பான தங்குமிடங்கள், சுகாதாரமான பணிச்சூழல், அவசர கால பாதுகாப்பு ஏற்பாடுகள் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். புலம்பெயர் தொழி லாளர்கள் தொடர்பான முழுமையான தரவுத்தளத்தை தமிழ்நாடு அரசு உருவாக்க வேண்டும்.

முறையான பாதுகாப்பு வசதிகள் இல்லாத, பொதுமக்களுக்குப் பாதிப்பைத் தருகின்ற தொழிற் சாலைகள் மூடப்பட வேண்டும். போபால் விசவாயுக் கசிவின் வரலாற்றுத் துயரத்திலிருந்து படிப்பினை பெற்று முழுமையான நடவடிக்கைகள் உறுதியாக எடுக்கப்பட்டிருந்தால் இதுபோன்ற பேரிழப்புகள் நிகழாமல் தடுத்திருக்கலாம். இனி ஓர் உயிர் இதுபோன்ற விபத்துகளில் பலியாகாமல் இருப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

**1**

# நல்லறங்களும்
# சமுதாய மறுமலர்ச்சியும்



● சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி

● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

முஸ்லிம் சமுதாயம் எழுச்சி அடைவதற்கும் மேலோங்குவதற்கும் வெற்றி பெறுவதற்கும் இன்றியமையாததாய் இருப்பது ஈமான் எனில் இந்த இறைநம்பிக்கைக்கு அடுத்த படியாகத் தனிச் சிறப்பிடம் பெற்றிருப்பது நல்லறங்கள்தாம் என்றே மகத்துவம் மிக்க குர்ஆன் அறிவிக்கின்றது.

பொறுமை, நன்றி உணர்வு, இறைவனையே சார்ந்திருத்தல், பாவமன்னிப்பு ஆகிய அனைத்தும் ஒரு தனி மனோபாவத்தை, இயல்பைக் கொண்டிருப்பதைப் போன்றே ஸாலிஹான அமல்களான நல்லறங்களும் தனி மனோபாவத்துக்கும் இயல்புக்கும் இலக்கணமாக இருக்கின்றன. ஸாலிஹான அமல் என்பது ஏதோ சில தற்காலிக அறங்களின் தொகுப்பு அல்ல. அதற்கு மாறாக ஆளுமையின் தனிச் சிறப்புமிக்க வடிவம்தான் ஸாலிஹான அமல்; ஆளுமையின் தனிச் சிறப்புமிக்க ரசனையின் வெளிப்பாடுதான் அது.

மற்ற பண்புகளைப் போன்றே இந்தப் பண்பும் தனிப்பட்ட ரீதியாகவும் கூட்டாகவும் இரண்டு தளங்களிலும் வெளிப்படுகின்றது. தனிமனிதர்களும் மும்முரமாக, சுறுசுறுப்பாகத் தொடர்ந்து செயல்படுகின்றார்கள். நல்லறத்தை விரும்புகின்ற அவர்களின் இந்தக் குணமே இந்த உலகத்திலும் மறுமையிலும் வெற்றியும் வளமும் பெற அவர்களுக்குத் துணை நிற்கின்றது.

இதே போன்று சமூகங்களும் கூட்டாக நல்லறங்களில் ஈடுபடுபவர்களாய், தொய்வில்லாமல் இயங்குபவர்களாய் மிளிர்கின்றன. இந்தக் கூட்டு இயங்கு குணம்(Activism) துடிப்பாகச் செயல்படும் பண்பு(Dynamism) அவர்களின் எழுச்சிக்கு வித்திடுகின்றது.

நல்லறத்தை விரும்புகின்ற போக்கும், எந்நேரமும் சுறுசுறுப்பாக இயங்குகின்ற இயல்பும் சமூகங்களின் கூட்டு நடத்தையாய் வெளிப்படுகின்ற போது எதுவும் செய்யாமல் முடங்கி இருத்தலும், சோம்பிக் கிடத்தலும் அருவருப்பான நடத்தைகளாய் மாறிவிட, ஒட்டுமொத்த சமூகமும் வகைவகையான நன்மை தரும் நல்லறங்களில் மும்முரமாக மூழ்கிவிட - இந்தக் கூட்டுப் பண்புதான் கூட்டு அறங்களின் அடையாளமாகும். இந்தக் கூட்டு அறங்கள் ஸாலிஹானவையாய் - உத்தமமானவையாய் இருக்கின்ற போது அவை ஒட்டுமொத்த சமூகத்துக்கும் பரக்கத், பெருவளர்ச்சி, எழுச்சி ஆகியவற்றுக்கான வழிவகைகளாய் மாறி விடுகின்றன. இவற்றால் கிடைக்கின்ற நன்மைகளும் பயன்களும் ஒட்டுமொத்த மனிதகுலத்துக்கும் கிடைக்கின்றன.

## நற்செயல்களின் முக்கியத்துவம்

இறைவனின் வேதத்தில் ஸாலிஹான அமல்களான நல்லறங்களுக்கு எந்த அளவுக்கு மிகப்பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைக் குர்ஆன் வாசகர்கள் ஒவ்வொருவரும் சிறப்பாக அறிவார்கள். மறுமையில் வெற்றி பெறுவதற்கும், சுவனத்தில் நுழைவதற்கும், இறைவனின்

உவப்பைப் பெறுவதற்கும், பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும், நரக வேதனையிலிருந்து தப்பிப்பதற்கும், இறைவனின் கோபத்துக்கு ஆளாவதிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கும் - எல்லாவற்றுக்கும் ஸாலிஹான அமல்கள்தாம் அவசியம் என்றே திருக்குர்ஆன் அறிவித்திருக்கின்றது.

திருக்குர்ஆனில் 33 அத்தியாயங்களில் 52 முறை ஈமானுடன் சேர்த்தே ஸாலிஹான அமல் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. 14 அத்தியாயங்களில் 19 முறை ஸாலிஹான அமல் குறித்துத் தனியாகச் சொல்லப்பட்டுள்ளது. நேரடியாக 'அமலுன் ஸாலிஹ்' என்கிற சொல்லைக் கொண்டு ஸாலிஹான அமல்கள் குறித்து குர்ஆன் குறிப்பிட்டிருக்கின்ற அதே வேளையில் ஹுஸ்னதுன், கைர், மஅரூஃப், சதகா போன்று இன்னும் ஏராளமான சொற்களைக் கொண்டும் ஸாலிஹான அமல்கள் குறித்து குர்ஆனில் சொல்லப்பட்டுள்ளது.

ஜிஹாத், முஜாஹிதா, ஸயீ போன்ற சொற்கள் கூட சில இடங்களில் போராட்டம், அறம், செயல் ஆகியவற்றின் மிக உயர்ந்த, உன்னத வடிவத்தை உணர்த்துகின்ற விதத்தில் ஆளப்பட்டுள்ளன. மேலும் தனித்தனியான நல்லறங்களைப் பற்றிய விவரங்களும் சில இடங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. (எடுத்துக்காட்டாக தொழுகை, ஸஜ்தா, ஜகாத், இன்ஃபாக், அநாதைகள், ஏழைகள் போன்றோரைப் பராமரித்தல், பசித்தவருக்கு உணவளித்தல், உறவுகளைப் பேணி நடத்தல், வெட்கத்தலங்களைப் பாதுகாத்தல், அமானிதம் பேணுதல் முதலியன).

ஸாலிஹான அமல்கள் குறித்து குர்ஆன் விவரித்துள்ளவற்றை வாசிக்கின்ற போது ஈமானின் வெளிப்பாடாக நம்பிக்கை கொண்டவர்களையும் இறைமறுப்பாளர்களையும் பிரித்துப் பார்ப்பதற்கான உரைகல்லாகத்தான் அது ஸாலிஹான அமல்களைப் பார்க்கின்றது என்பது விளங்கும். ஓர் அறம் நல்லறமாக - ஸாலிஹான அமலாக - அறிவிக்கப்படுவதற்கு இறைநம்பிக்கை மிகவும் அவசியம்; ஈமான் இன்றி எந்தவொரு நல்லறமும் இறைவனிடம் ஏற்றுக் கொள்ளப்படாது என்றும் திருக்குர்ஆன் தெளிவுபடுத்துகின்றது.

வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் ஈமானும் ஸாலிஹான அமலும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன; அவற்றில் ஒன்று இல்லாமல் போகும் போது மற்றொன்றும் இல்லாமல் போகும்; அவற்றில் ஒன்று இருக்கும் போது மற்றொன்றும் திண்ணமாக இருந்தே தீரும். இரண்டும் ஒன்று சேர்ந்து இறைவன் மீது நம்பிக்கை கொண்ட அடியானின் ஆளுமையை வார்த்தெடுக்கின்றன. ஈமான் இல்லாமல் மேற்கொள்ளப்



படும் எந்தவொரு நல்லறமும் இறைவனிடம் ஏற்றுக் கொள்ளப்படவே மாட்டாது. அதே போன்று நல்லறங்கள் இல்லாமல் வெறுமனே நம்பிக்கை கொண்டதாக வாதிடுவதாலேயே ஒருவருக்கு ஈடேற்றம் கிடைத்துவிடாது.

ஸாலிஹான அமல்களில் ஈடுபடுகின்ற ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய மறுமை வெற்றியின் வகைகளை, நன்மைகளைக் குறித்துதான் திருக்குர்ஆனில் மிக அதிகமாகச் சொல்லப்பட்டுள்ளது. என்றாலும் ஏராளமான இடங்களில் 'இந்த உலகத்தில் வெற்றி கிடைப்பதற்கும், சமூகங்கள் எழுச்சியும்

மேலாதிக்கமும் பெறுவதற்கும் ஸாலிஹான அமல்கள் அவசியம்' என்றும் குர்ஆன் ஆணித்தரமாக அறிவிக்கின்றது. ஒருவர் ஸாலிஹான அமல்களில் ஈடுபடுவதால் அவருக்குக் கிடைக்கின்ற ஏராளமான உலக நன்மைகள் குறித்தும் குர்ஆன் ஏராளமான இடங்களில் குறிப்பிட்டுள்ளது. அந்த நன்மைகளில் ஒரு சிலவற்றை இங்கே சுருக்கமாக விவரிக்கின்றோம்:

### உலக வாழ்வின் உன்னதமும் தூய்மையும்

'ஆணாயினும் பெண்ணாயினும் எவர் இறைநம்பிக்கை கொண்டவராய் இருக்கும் நிலையில் நற்செயல் புரிகின்றாரோ அவரை (இவ்வுலகில்) தூய வாழ்வு வாழச் செய்வோம்.' (திருக்குர்ஆன் 16:97) - இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஹயாத்தே தய்யிபா - தூய வாழ்வு என்பதற்கு இந்த உலக வாழ்வில் நிம்மதியும் மனநிறைவும், மகிழ்வும் ஆனந்தமும், உறுதியும், இனிமையும், பேரின்பமும் கிடைப்பதைக் குறிக்கும் என்றே குர்ஆன் விரிவுரையாளர்கள் பெரும்பாலோர் விளக்கம் அளித்திருக்கின்றார்கள்.

### மக்களால் நேசிக்கப்படுகின்றவர்கள்

ஒருவர் நல்லறங்களைச் செய்வதால் மக்கள் மத்தியில் அவருடைய புகழும் செல்வாக்கும் அதிகரிக்கின்றது. மக்களால் நேசிக்கப்படுபவராக அவர் மாறிவிடுகின்றார் என்றே திருக்குர்ஆன் ஸாலிஹான அமல்களால் ஒருவருக்குக் கிடைக்கின்ற உலக நன்மையாகக் குறிப்பிடுகின்றது.

'எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்து கொண்டிருக்கின்றார்களோ அவர்களுக்காக விரைவில் கருணை மிக்க இறைவன் (மக்களின் உள்ளங்களில்) அன்பைத் தோற்றுவிப்பான்'. (திருக்குர்ஆன் 19:96)

மௌலானா அபுல் கலாம் ஆசாத்(ரஹ்) அவர்கள் இந்த வசனத்துக்கு விளக்கம் அளிக்கின்ற போது குறிப்பிடுகின்றார்: 'ஈமானும் நல்லறமும் ஒன்று சேரும்போது மக்கள் உங்களை விரும்புவார்கள் என்கிற இந்த யதார்த்தத்தை இந்த வசனம் அருளப்பட்ட சில ஆண்டுகளுக்குள்ளாகவே உலகம் உணர்ந்துகொண்டது என்பதற்கு வரலாறே சான்று. ஈமானின் பக்கமும் நல்லறங்களின் பக்கமும் விடுக்கப்பட்ட இந்த அழைப்பு எத்தகைய முஸ்லிம்களை வார்த்தெடுத்தது எனில் மக்கள் அவர்களை மனமுவந்து ஏற்றுக்கொண்டது மட்டுமின்றி அதற்கும் மேலாக அவர்களை பேரார்வத்துடனும் பேரெழுச்சியுடனும் வரவேற்று பேரானந்தமடைந்தார்கள்.

மக்கள் பார்த்து வெருண்டோடுகின்ற அளவுக்கு பயத்தையும் பீதியையும் கிளப்புகின்ற அசுர பலம் கொண்டவர்களாக அவர்கள் இருக்கவில்லை. நன்மைக்கான,



**நல்லறங்களைச் செய்பவர்களின் பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அவர்களுக்கு அருளப்படுகின்ற அருள்வளங்கள் பல்கிப் பெருகிக் கொண்டே போகின்றன.**

நீதிக்கான தூதுச் செய்தியாக இருந்தார்கள். அதனால் மக்கள் அவர்களை நாடி அவர்களிடம் ஆசையோடு ஓடோடி வந்தார்கள். எங்கள் நாட்டுக்கு வாருங்கள் என எத்தனையோ நாடுகளிலிருந்து அவர்களுக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டன. பெரு நகரங்கள் அவர்களுக்காகத் தங்களின் பெரு வாயில்களை அகலமாகத் திறந்து வைத்தன. கோட்டைகள் தங்களின் சாவிகளை அவர்களுக்கு முன்னால் வைத்துவிட்டார்கள். அடக்குமுறைக்கு ஆளாகி பரிதவித்த மக்கள் அனைவருமே அவர்களைத் தங்களின் மீட்பர்களாய்ப் பார்த்தார்கள்.

அஜ்னாதீன், யர்மூக் ஆகிய போர்க்களங்களில் அவர்களின் இராணுவ வீரர்கள் பாசிந்திய சாம்ராஜ்ய படையினருடன் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் அதே சாம்ராஜ்யத்தின் சாமான்யர்களோ - சிரியா நாட்டு மக்களோ அன்புச் செய்தியை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். பஸ்ரா மாநகரமோ தன்னுடைய வாயில்களைத் திறந்து விட்டிருந்தது. ஹம்ஸ் வாசிகளோ அவர்களுக்காக நேர்ச்சைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். தராபிலிஸ் நகரமோ அவர்களின் வருகைக்காக வழி மேல் விழி வைத்துக் காத்துக்கிடந்தது. அவர்கள் வந்த போதோ மகிழ்ச்சி முழக்கங்கள் நிற்கவே இல்லை.

இதே போன்று அவர்கள் எகிப்தின் பக்கம் திரும்பிய போது எகிப்து தேசத்து கிறித்தவர்களே அவர்களை வரவேற்பதற்காக முன்னணியில் வந்து நின்றார்கள். அவர்கள் எந்தெந்த மாகாணங்களை எல்லாம் கடந்து சென்றார்களோ அங்கே அவர்களுக்காக சாலைகள் செம்மைப்படுத்தப்பட்டிருப்பதையும் பாலங்கள் பழுதுபார்க்கப்பட்டு தயாராக வைக்கப்பட்டிருப்பதையும் கண்டார்கள். ஆயுதம், ஆள், அம்பு என எல்லாமே தங்கு தடையின்றி அவர்களுக்கு வந்து சேர்வதில் எந்தத் தடையையும் அவர்கள் சந்தித்ததே இல்லை’.

## பிரார்த்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படல், அருள்வளங்களின் பெருக்கம்

நல்லறங்களைச் செய்பவர்களின் பிரார்த்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அவர்களுக்கு அருளப்படுகின்ற அருள்வளங்கள் பல்கிப் பெருகிக் கொண்டே போகின்றன. ‘இறைநம்பிக்கை கொண்டு நல்லறங்கள் புரிவோரின் இறைஞ்சுதல்களை அவன் ஏற்றுக் கொள்கின்றான். தனது அருளிலிருந்து அவர்களுக்கு இன்னும் அதிகம் வழங்குகின்றான். நிராகரிப்பவர்களுக்கோ - கடும் தண்டனை அவர்களுக்கு இருக்கின்றது’ (திருக்குர்ஆன் 42:26)

இந்த வசனத்திற்கு முந்தைய வசனங்களில் சொல்லப்பட்டுள்ளவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கின்ற போது இது பொருளாதாரச் செழிப்பையும் வளர்ச்சியையும் குறிக்கின்றது என்பது விளங்கும். இறைநம்பிக்கையாளர்களில் சிலர் யூதக் கோத்திரங்களின் செல்வச் செழிப்பைப் பார்த்து தமக்கும் இதே போன்று வளமும் செல்வச் செழிப்பும் கிடைத்திடாதா என்று உள்ளுக்குள் ஆசைப்பட்ட போது இந்த வசனம் அருளப்பட்டதாக குர்ஆன் விரிவுரையாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் இந்த வசனத்திலும் ஈமானும் நல்லறமும் தருகின்ற உலக நன்மைகள் குறித்தே உணர்த்தப்பட்டுள்ளது எனலாம்.

## நிலைமைகள் சீர்பெறும்

இதற்கும் ஒரு படி மேலாக ‘ஸாலிஹான அமல்கள் செய்பவர்களின் தீமைகளை அல்லாஹ் களைந்துவிடுவான்; அவர்களின் நிலைமைகளைச் சீர்ப்படுத்துவான்’ என்றும் திருக்குர்ஆன் அறிவிக்கின்றது.

‘எவர்கள், இறைநம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்தார்களோ மேலும், முஹம்மதின் மீது இறக்கியருளப்பட்டதை அது முழுக்க முழுக்க அவர்களின் அதிபதியிடமிருந்து வந்த சத்தியமாகும் என்று ஏற்றுக் கொண்டார்களோ அவர்களின் தீமைகளை அல்லாஹ் அவர்களை விட்டுக் களைந்து,

அவர்களின் நிலைமையைச் சீர்திருத்திவிட் டான்.' (திருக்குர்ஆன் 47:2)

மௌலானா சையித் அபுல் அஃலா மௌதூதி(ரஹ்) அவர்கள் இந்த வசனத் துக்கு விளக்கம் அளிக்கின்றபோது குறிப் பிடுகின்றார்: 'இதற்கும் இரண்டு பொருள்கள் உண்டு. ஒன்று, அவர்களின் முந்தைய நிலை மையை மாற்றி இனி வருங்காலங்களில் இறைவன் அவர்களைச் சரியான பாதையில் அமர்த்தி விட்டான். அவர்களின் வாழ்க்கை களை அழகுபடுத்தி விட்டான். இரண்டாவ தாக அவர்கள் இதுவரை எத்தகைய பலவீன மான நிலையிலும் எதிர்த்து எதுவும் செய்ய இயலாத நிலைமையிலும் கொடுமைக்கு இலக்காகி இருந்து வந்தார்களோ இறைவன் அவர்களை அதிலிருந்து விடுவித்து விட் டான்.

இப்போது அவர்களுக்காக எத்தகைய நிலைமைகளை உருவாக்கி இருக்கின்றான் எனில் அவர்கள் கொடுமைகளைச் சகித்துக் கொள்வதற்குப் பதிலாக கொடுமைகளுக்கு எதிராகப் போரிடுபவர்களாய், அடங்கி யொடுங்கி இருப்பதற்குப் பதிலாக தம்மு டைய வாழ்க்கைத் திட்டத்தின் படி சுதந்திர மாக இயங்குபவர்களாய், அடங்கி வாழ்வதற் குப் பதிலாக மேலோங்கியே தீர்வார்கள்'.

### அமைதியும் பாதுகாப்பும்

அத்தியாயம் அல்கஹ்ஃபில் கிள்ரு அவர்களின் நிகழ்வை விவரிக்கின்ற போது இரண்டு அநாதைச் சிறுவர்களுக்குச் சொந்த மான கருவூலங்களைப் பாதுகாப்பதற்காக கிள்ரு அவர்கள் சுவர் ஒன்றை இடிந்து விழு கின்ற நிலையைச் சரி செய்து அதனை உறுதிப் படுத்துகின்ற செய்தி சொல்லப்படுகின்றது. தொடர்ந்து,

'மேலும் அந்தச் சுவரைப் பற்றிய விஷயம் என்னவெனில் அது அவ்வூரிலிருந்த இரு அநாதைச் சிறுவர்களுக்குரியது. அதன் அடியில் அவர்களுக்குரிய புதையல் ஒன்று இருந்தது. மேலும், அவர்களின் தந்தை நல்ல மனிதராக இருந்தார்...' (திருக்குர்ஆன் 18:82)

அல்லாமா குர்தூபி அவர்கள் இந்த வசனத்துக்கு விளக்கம் அளிக்கின்ற போது எழுதுகின்றார்: 'ஸாலிஹான அமல்களைச் செய்கின்ற உத்தமரை மட்டுமின்றி அவரு டைய குழந்தைகளையும் - அவர்களுடனான உறவு தூரத்துச் சொந்தமாக இருந்தாலும் சரியே - அல்லாஹ் பாதுகாக்கின்றான் என்ப தற்கு இதுவே சான்று ஆகும்'.

### எழுச்சி, மேலாதிக்கம், அதிகாரமும் கண்ணியமும் வழங்கப்படல், அமைதியும் பாதுகாப்பும்

இந்த விவாதத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருப்பது கிலாஃபத் தொடர்பான அத்தி யாயம் அந்நூரின் வசனம்தான்.

'உங்களில் எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்தார்களோ அவர் களிடம் அல்லாஹ் வாக்குறுதி அளிக்கின் றான். என்னவெனில் அவர்களைப் பூமியில் பிரதிநிதிகளாக்குவான்; அவர்களுக்கு முன் சென்று போன மக்களைப் பிரதிநிதிகளாக் கியது போன்று! மேலும், அவர்களுக்காக அல்லாஹ் எந்த மார்க்கத்தை விரும்பினானோ அந்த மார்க்கத்தை வலிமையானதாய் அதி காரம் மிக்கதாய் ஆக்குவான். மேலும், அவர் களின் (இன்று நிலவுகின்ற) அச்சநிலையை அமைதி நிலையாய் மாற்றித் தருவான்...' (திருக்குர்ஆன் 24:55)

திருக்குர்ஆனின் இந்த அறிவிப்புகளி லிருந்து உலகத்தில் அதிகாரமும் செல்வாக் கும் பெற்றவர்களாய் சமூகங்கள் எழுச்சி பெறுவதற்கான முக்கியக் காரணமாக இருப்பது ஸாலிஹான அமல்கள்தாம் என்பது தெளிவாகின்றது. அரசியல் எழுச்சி, பொரு ளாதார வளர்ச்சி, கண்ணியம், செல்வாக்கு, அமைதி, பாதுகாப்பு, அதிகாரம் பெறுதல், முன்னேற்றம் ஆகிய எல்லாமே நற்செயல் களைப் பொறுத்தே அமைகின்றன.

ஸாலிஹான அமல் என்றால் என்ன? எது நல்லறம்? என்பதைக் குறித்து *அடுத்த இதழில் பார்ப்போம்.*

• சையத் அலீ

**கடந்த 8 ஆண்டுகளாக அநியாயமாகச் சிறையில் இருக்கும் நேர்மையாள ரான முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி சஞ்சீவ் பட்டிற்கு, அவரது பிள்ளைகள் ஆகாஷியும் சாந்தனுவும் தந்தையர் தினத்தில்(21.06.2026) எழுதிய உணர்வுப்பூர்வமான கடிதம்!**

# அப்பா...! நீங்கள் எங்கள் நாயகன் எங்கள் துருவ நட்சத்திரம்

*அன்பான அப்பாவுக்கு!*



சஞ்சீவ் பட் IPS

நாம் ஒருவரையொருவர் பிரிந்து தவிக்கும் எட்டாவது தந்தையர் தினம் இது.

‘தந்தை’ என்ற சொல்லைக் கேட்டதும், பொதுவாக மக்கள் குடும்பத்தைக் காப்பவர், பாதுகாப்பவர் என்றே நினைப்பார்கள். ஆனால் எங்களுக்கு, நீங்கள் அதற்கும் மேலானவர். நீங்கள் எங்கள் நண்பர், வழிகாட்டி, ஆசான், எங்களின் மிகப்பெரிய உத்வேகம், தீவிர ஆதரவாளர், எங்கள் நெறிமுறை திசைகாட்டி, எங்கள் வலிமை. ஏன், எங்கள் ஆன்மாவே நீங்கள்தான்! இன்று நாங்கள் அடைந்துள்ள நிலை, நாங்கள் பின்பற்றும் ஒவ்வொரு மதிப்பு, எங்களிடம் உள்ள அசைக்க முடியாத நம்பிக்கையும், எங்களின் துணிச்சலும் என அனைத்தும் உங்களிடமிருந்தே தொடங்குகின்றன!

உலகத்தின் சிக்கல்களை நாங்கள் புரிந்து கொள்வதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, ‘துணிச்சல்’ என்றால் என்னவென்று அறிய விரும்பினால், நாங்கள் உங்களை மட்டுமே பார்த்தால் போதும் என்பதை உணர்ந்திருந்தோம்.

‘நேர்மை’ எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ள வேண்டுமானால், நாங்கள் உங்களை மட்டுமே பார்க்க வேண்டியிருந்தது. பிறருக்காகக் குரல் கொடுப்பது என்றால் என்ன, பாதுகாப்பு தேவைப்படுபவர்களைப் பாதுகாப்பது என்றால் என்ன, மௌனமாக இருப்பது எளிதாக இருக்கும் போது துணிந்து பேசுவது என்றால் என்ன, சரணடைவது சுலபமாகத் தோன்றும் போது விடாமுயற்சியோடு நிற்பது என்றால் என்ன என்பதையெல்லாம் புரிந்து கொள்ள நாங்கள் உங்களை மட்டுமே பார்த்தால் போதுமானதாக இருந்தது.

கடந்த ஆண்டுகளில், சாந்தனுவும் நானும் அதிகார போதையில் இருக்கும் சில மனிதர்களைப் பார்த்திருக்கிறோம். அவர்களின் முடிவுகள் எண்ணற்ற மனிதர்களின் வாழ்க்கைப் பாதையை எவ்வளவு ஆழமாகவும் வேதனையாகவும் மாற்றியமைத்து உள்ளன என்பதைக் கண்டிருக்கிறோம். பொறுப்பான பதவிகளில் இருக்கும் மனிதர்கள், துணிச்சலைக் கைவிட்டுத் தங்களின் சுயபாதுகாப்பையே தேர்ந்தெடுப்பதைக் கண்டோம். மனிதர்கள் தங்களின் கொள்கைகளை அழுத்தங்களுக்கும் பேராசைக்கும் அடகு வைப் பதையும், மனசாட்சியை விடுத்து வசதியையும், நேர்மையை விடுத்து அடிமைத்தனத் தையும், உண்மையை விடுத்து மௌனத்தையும், நீதியை விடுத்து சுயநலத்தையும் தேர்ந் தெடுப்பதைக் கண்டோம்.

அடிக்கடி அவர்களைப் பார்க்கும்போது, எனக்குள் இந்தக் கேள்வி எழும்: இந்த மனிதர்கள் தங்களுக்குப் பின் என்ன வரலாற்றுச் சுவடை விட்டுச் செல்லப் போகிறார்கள்? காலம் அவர்களின் பதவிகளையும், செல்வாக்கையும், அதிகாரத்தையும் பறித்த பிறகு அவர்களிடம் மிஞ்சுவது என்ன?

அவர்களின் பிள்ளைகள் வளர்ந்து உண்மைகளைப் புரிந்து கொள்ளும் வயதை எட்டும்போது, தங்களுக்குத் தாங்களே என்ன சொல்லிக் கொள்வார்கள்? தங்களின் கடந்த கால முடிவுகளைத் திரும்பிப் பார்க்கும்போது அவர்கள் என்ன நினைப்பார்கள்?

பேச வேண்டிய நேரத்தில் மௌனமாக இருந்த அந்த மனிதர்களைப் பற்றி அவர்களின் பிள்ளைகள் பெருமையாகப் பேசுவார்களா? நிமிர்ந்து நிற்க வேண்டிய இடத்தில் குனிந்து வணங்கிய மனிதர்களை அவர்கள் வியந்து பாராட்டுவார்களா?

தங்கள் உயர்வுக்கு நேர்மையையும், தங்களின் வசதிக்கு மனசாட்சியையும் விலை பேசிய மனிதர்களை அவர்கள் கொண்டாடுவார்களா? அநீதி நடப்பதைக் கண்டும், பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக மௌனத்தைத் தேர்ந்தெடுத்தவர்களை மதிப்பார்களா?

அல்லது சரியானவற்றின் பக்கம் நிற்க வேண்டிய தருணம் வந்தபோது, இந்த மனிதர்கள் தற்காலிக வசதிக்காக மண்டியிட்டார்கள் என்ற உண்மையை உணர்ந்து, தாங்க முடியாத அவமான பாரத்தைச் சுமப்பார்களா?

எனக்குத் தெரியாது.

ஆனால் எனக்கு உறுதியாகத் தெரிந்த ஒன்று என்னவென்றால், சாந்தனுவுக்கும் எனக்கும் தெரிந்த விசயம் அவர்களுக்கு ஒரு போதும் தெரியப்போவதில்லை.

எந்தச் சூழ்நிலையிலும் சமரசம் செய்ய முடியாத குணமும், மிரட்டல்களுக்குப் பணியாத மனசாட்சியும், உடைக்க முடியாத மன உறுதியும் கொண்ட ஒரு மனிதனின் பிள்ளைகளாக இருப்பதன் அளவிட முடியாத பாக்கியத்தை அவர்கள் அறியவே மாட்டார்கள்.

தன் வாழ்க்கையையே துணிச்சலுக்கு உதாரணமாக மாற்றிய ஒரு தந்தையிடமிருந்து வலிமையைப் பெறுவது எப்படிப்பட்ட உணர்வு என்பதை அவர்கள் உணரவே மாட்டார்கள்.

உங்கள் பெயரைச் சொல்லும்போது எங்கள் நரம்புகளில் பாயும் அந்தப் பெருமிதத்தை அவர்கள் அறிய மாட்டார்கள்.

எங்களுக்குப் புத்தகம், திரைப்படங்களில் வரும் நாயகர்கள் தேவையில்லை, ஏனென்றால் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உண்மையான தலைவனாக(Hero) விளங்கும் ஒருவரைத் தந்தையாகப் பெற்ற பெருமை எங்களுக்கு உண்டு.

வசதிகளை விட கொள்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த மனிதர். மற்றவர்கள் மண்டியிட்டபோது நிமிர்ந்து நின்ற மனிதர். மற்றவர்கள் மௌனமாக இருந்தபோது துணிந்து பேசிய மனிதர். பாதுகாப்பை விட உண்மையைத் தேர்ந்தெடுத்த மனிதர். சரியானதைச் செய்ததற்காகப் பெருவிலை கொடுத்த மனிதர்!

அப்பா, நீங்கள் எப்போதும் வாழ்ந்து காட்டியே எங்களுக்கு வழிகாட்டியிருக்கிறீர்கள்.

துணிச்சல் என்பது ஏதோ ஒரு கணத்தில் காட்டப்படும் அதிரடியான வீரச்செயல் அல்ல, மாறாக அது ஒரு பழக்கம் என்பதை



எங்களுக்குக் கற்றுக்கொடுத்தீர்கள். அது இந்த உலகத்தை எதிர்கொள்ளும் ஒரு வழிமுறை; சமரசம் செய்து கொண்டால் வாழ்க்கை எளிதாகிவிடும் என்ற நிலையிலும், தன் கொள்கைகளை விட்டுக் கொடுக்க மறுக்கும் ஓர் அமைதியான பிடிவாதம் அது.

கூட்டத்தோடு கூட்டமாக நிற்பது பாது காப்பானது என்றாலும், தனித்து நிற்பதற்கான துணிவு அது. துயரங்களின் கண்களை நேருக்கு நேர் சந்தித்து, அதனிடம் நம் மனித நேயத்தை இழக்க மறுக்கும் ஆற்றல் அது.

அநீதியைக் கண்டு ஒருபோதும் மௌன மாக இருக்கக் கூடாது என்பதையும், விளை வுகள் எதுவாக இருந்தாலும் சரியானவற் றிற்காகப் போராட வேண்டும் என்பதையும், சோதனைகளைத் தலைநிமிர்ந்து எதிர்கொள்ள வேண்டும் என்பதையும், புயலைக் கண்டு ஓடாமல் அதை நோக்கி முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதையும், எங்களின் இதயத்தில் உள்ள நெருப்பும் ஆன்மாவில் உள்ள துணிச்சலும் ஒருபோதும் அணைந்துவிடக் கூடாது என்பதையும் உங்களிடமிருந்தே நாங்கள் கற்றுக்கொண்டோம்.

நம்பிக்கை என்பது அறியாமை அல்ல, மாறாக அது ஒரு எதிர்த்து நிற்றல் என்பதை எங்களுக்குக் கற்றுக்கொடுத்தீர்கள். அது அநீதிக்கு இறுதி வெற்றியைத் தர மறுப்பது. உண்மை புதைக்கப்பட்டாலும் வாழும், நீதி தாமதிக்கப்பட்டாலும் வெல்லும், நன்மை தண்டிக்கப்பட்டாலும் நிலைத்திருக்கும் என்ற அசைக்க முடியாத விசுவாசம் அது.

பிள்ளைகள் தங்களின் நாயகர்களைப் புத்தகங்களிலும், திரைப்படங்களிலும் தேடு வார்கள். ஆனால் சாந்தனுவும் நானும் அப்படித் தேட வேண்டிய அவசியமே இருந்த தில்லை, ஏனென்றால் எங்களுடைய நிஜ நாயகனுடன் வளரும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது. சதையும் ரத்தமுமான ஒரு மனிதர்! எங்களை வழிநடத்திய குரலுக்குச் சொந்தக் காரர். எங்களை வடிவமைத்த முன்மாதிரி. எங்களைத் தாங்கிப் பிடித்த நேசம். எங்களின் தந்தை என்று அழைப்பதில் நாங்கள் அள வற்ற பெருமை கொள்ளும் எங்கள் நாயகன் நீங்கள்!

அப்பா, நீங்கள் எங்களை எப்போதும் ஊக்குவித்து வருகிறீர்கள், எங்கள் வாழ்க் கையை என்றும் அழியாத வகையில் செதுக்கியிருக்கிறீர்கள். நாங்கள் குழந்தையாக இருந்ததிலிருந்தே எங்களின் சிறுபிராயத்தை சிரிப்பாலும், பாசத்தாலும், புத்தகங்களாலும், இசையாலும், கலையாலும், பண்பாட்டாலும், தேடல்களாலும், வியப்புகளாலும் நிரப்பி னீர்கள்; சிறந்த ஆளுமைகளை எங்களுக்கு அறிமுகப்படுத்த நீங்கள் எடுத்த முயற்சிகள் சற்றும் சளைக்காதவை. எங்களின் இந்த அற்புத மான வாழ்க்கைப் பாதையில் நீங்கள் எங்களை வழிநடத்தியபோது, சாந்தனுவும் நானும் சிறு வயதிலிருந்தே யாராக மாற வேண்டும் என்று ஆசைப்பட்டோமோ, அது எப்போதும் நீங்களாகத்தான் இருந்தீர்கள், இனிமேலும் நீங்களாகத்தான் இருப்பீர்கள் என்பதை நீங்கள் எப்போதாவது உணர்ந்திருக்கிறீர் களா?

கடந்த எட்டு நீண்ட ஆண்டுகளாக,கோழை களும், முதுகெலும்பில்லாதவர்களுமான சில மனிதர்களால் நாம் பிரிக்கப்பட்டிருக்கிறோம். அவர்கள் எங்களின் விலைமதிப் பற்ற ஆண்டுகள், கொண்டாட்டங்கள், சாதாரண தருணங்கள், நினைவுகள், ஈடு செய்ய முடியாத காலத்தைத் திருடி விட்டார்கள். ஆனால், அவர்கள் எதை உண்மையிலேயே அழிக்க நினைத்தார் களோ, அதில் முறையாகத் தோற்றுப் போனார்கள். உங்களின் துணிச்சலையும், மன உறுதியையும், மீண்டெழும் சக்தி



யையும் உடைப்பதில் அவர்கள் தோற்று விட்டார்கள்!

ஒரு மனிதனின் பெருமை என்பது அவர் தொட்ட மனிதர்களின் வாழ்க்கையாலும், அவர் கைவிட மறுத்த கொள்கைகளாலும் அளவிடப்படுகிறது என்று மக்கள் கூறுவார்கள். அந்த அளவுகோலின்படி பார்த்தால் அப்பா, நீங்கள் ஒரு இமயமலை!

அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துபவர்களின் பெயர்கள் காலப்போக்கில் காணாமல் போய்விடும்.

ஆனால், அவர்களை எதிர்த்து நின்றவர்களின் பெயர்கள் தலைமுறை தலைமுறைக்கு எதிரொலித்துக் கொண்டே இருக்கும். ஏனென்றால், இறுதியில் நன்மை காயப்பட்டாலும், தீமையை நன்மை வென்றே தீர வேண்டும். நீதி அரசியலாலும் அதிகாரத்தாலும் மிதிக்கப்பட்டாலும், இறுதியில் அதுவே வெல்ல வேண்டும். உண்மை ஒடுக்கப்பட்டாலும், அது வெளிவந்தே தீர வேண்டும்.

அப்பா, நீங்கள் இதிலிருந்து முன்னைவிட அதிக வலிமையோடு வெளிவருவீர்கள் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை!

அப்பா, நீங்கள் எங்கள் தந்தை மட்டுமல்ல, எங்கள் நாயகன்; எங்களின் வழிகாட்டும் துருவ நட்சத்திரம்; எங்களின் அடித்தளம்!

அடிமைத்தனத்திற்குப் பதிலாக மக்கள் துணிச்சலைத் தேர்ந்தெடுக்கும் வலிமையைப் பெறும் ஒரு எதிர்காலம் அமையட்டும்!

வசதியை விட மனசாட்சிக்கும், அதிகாரத்தை விட நேர்மைக்கும், பயத்தை விட உண்மைக்கும் முக்கியத்துவம் தரும் ஒரு எதிர்காலம் மலரட்டும்!

அரசியல் லாபங்களுக்காக ஏற்கனவே பல உயிர்கள் சிதைக்கப்பட்டுவிட்டன, பல கனவுகள் மிதிக்கப்பட்டுவிட்டன, பலரின் எதிர்காலம் பலியிடப்பட்டுவிட்டது.

மௌனமாக இருப்பதற்கான காலம் எப்போதோ கடந்துவிட்டது. இப்போது துணிச்சலுக்கான நேரம் வந்துவிட்டது.

**எந்தச் சூழ்நிலையிலும் சமரசம் செய்ய முடியாத குணமும், மிரட்டல்களுக்குப் பணியாத மனசாட்சியும், உடைக்க முடியாத மன உறுதியும் கொண்ட ஒரு மனிதனின் பிள்ளைகளாக இருப்பதன் அளவிட முடியாத பாக்கியத்தை அவர்கள் அறியவே மாட்டார்கள்!**

நீங்கள் எங்களுக்குக் கற்றுக்கொடுத்த ஒரு விசயம் உண்டென்றால், அது இதுதான்: உண்மையைப் பேசும் ஓர் ஒற்றைக் குரல், கோழைகளின் பெரும் படையை விட உரக்க ஒலிக்கும்.

இந்தக் கடினமான ஆண்டுகள் கடந்து, நம் பிரிவை ஆண்டுகளால் அளவிடாத, நம் கொண்டாட்டங்களில் உங்கள் இல்லாமை இல்லாத, நம் வீட்டின் பாசப் பிணைப்பில் நாம் மீண்டும் ஒன்றாக அமரும் அந்த நாள் விரைவில் வரட்டும்.

நம் குடும்பம் மீண்டும் ஒன்றிணையும் அந்த நாளுக்காகக் காத்திருக்கிறோம்.

இன்னும் பல ஆண்டுகள் சிரிப்பு, அன்பு, புத்தகங்களைப் பற்றிய விவாதங்கள், நகைச்சுவைகள், ஒன்றாகப் பகிரும் உணவுகள், இசை கேட்பது, நீங்கள் எப்போதும் சொல்வது போல் 'நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளும்' அந்த நாள்களுக்காகக் காத்திருக்கிறோம்.

இனிய தந்தையர் தின வாழ்த்துகள் அப்பா!

எல்லையற்ற பிரபஞ்சத்தையும் தாண்டி நாங்கள் உங்களை நேசிக்கிறோம். உங்களின் பிள்ளைகளாக இருப்பதில் நாங்கள் அளவிட முடியாத பெருமிதம் கொள்கிறோம்.

**மட்டற்ற அன்புடனும் பாசத்துடனும்,**
***ஆகாஷி சாந்தனு***

https://www.facebook.com/share/1GPsbY75MX/

# இதயம் காப்போம்

• S. சுஹைல் அஹ்மத்

இறைவன் தன் அடியார்களுக்கு வழங்கிய மாபெரும் அருட்கொடை இதயம். இதயம் இல்லையேல் மனிதனால் உயிர் வாழ முடியாது. இதயம் மனிதனின் உடல் உறுப்புகளில் முக்கியமான ஒன்று. துடிப்பது மட்டுமே இதயத்தின் வேலை அல்ல. அல்லாஹ் சிந்திக்கும் மக்களுக்கு பல்வேறு படிப்பினைகள் இருக்கிறது என்று கூறுகிறான். எல்லாவற்றுக்கும் மேலாக இதயம் இறைவன் பார்க்கக் கூடிய இடமாக இருக்கிறது.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘இறைவன் உங்களுடைய உருவத்தையும் செல்வத்தையும் பார்ப்பதில்லை. மாறாக, உங்களுடைய உள்ளத்தையும் (இதயத்தையும்) செயல்களையும் தான் பார்க்கிறான். மேலும், ‘நன்மை செய்வதற்கு வசதி வாய்ப்புகள் இருந்தும் இதயப்பூர்வமாகச் செய்யா விட்டால், நம்மால் அந்த நன்மைக்கான கூலியை பெற்றுக் கொள்ள முடியாது. மேலும், நன்மை செய்வதற்கு வசதி வாய்ப்புகள் இல்லை என்றாலும் நன்மை செய்ய வேண்டும் என்று இதயப்பூர்வமாகச் சிந்தித்தால் நம்மால் அந்த நன்மைக்கான கூலியை பெற முடியும்’

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘மனித உடலில் ஒரு சதைத் துண்டு இருக்கிறது. அது சரியாக இருக்குமானால் உடல் முழுவதும் சரியாக இருக்கும். ஒருவேளை அச் சதைத் துண்டு சீர்கெட்டு விட்டால், முழு உடலும் சீர்கெட்டு விடும். அதுதான் இதயம்’

நாம் பிற உடல் உறுப்புகளுக்கு எவ்வாறு முக்கியத்துவம் அளிக்கிறோமோ, எவ்வாறு பிற உடல் உறுப்புகளை தினசரி நாம் தூய்மைப்படுத்துகிறோமோ, அதுபோன்று நம்முடைய இதயத்தைத் தூய்மைப்படுத்துகிறோமா என்பதைக் குறித்து நாம் சிந்திக்க வேண்டும்.

## இதயத்தை எவ்வாறு தூய்மைப்படுத்த முடியும்?

நாம் தினமும் குளிப்பதனால் நம்முடைய உடல் தூய்மையாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கிறது. தேவையற்ற உணவையும் பானத்தையும் தவிர்த்துக் கொள்வதனால் நம்முடைய உள்ளுறுப்புகள் ஆரோக்கியமாக இருக்கிறது. ஆனால் என்றைக்காவது இதயத் தூய்மையைக் குறித்தும் அதன் ஆரோக்கியத்தைக் குறித்தும் சிந்தித்து இருக்கிறோமா?

பொய், பொறாமை, தற்பெருமை, பிறரைக் குறித்து மோசமாக நினைப்பது, தனக்கு இணையாக யாரும் இருந்து விடக் கூடாது என்று நினைப்பது, பிறரை மேலே வர விடாமல் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் ஆகியன நம்முடைய இதயம் பலவீனமாக இருக்கிறது என்பதற்கான அடையாளங்களாகும். இதனால் நம்மால் கடமையான தொழுகையைக் கூட இதயப்பூர்வமாக நிறைவேற்ற முடிவதில்லை. கடமை எப்போது கடுமையானதாக மாறுகிறதோ அப்போது அந்தக் கடமை கூட பாரமானதாக அமையும்.

‘பொறுமை மற்றும் தொழுகையின் மூலம் (இறைவனிடம்) உதவி தேடுங்கள். நிச்சயமாக அது (தொழுகை) ஒரு பாரமான செயல்தான். ஆனால் பயபக்தி உடையவர்களுக்கு அது ஒரு பாரமான செயலே அல்ல’ (திருக்குர்ஆன் 2:45)




இதயத்தில் இறைவனை குறித்தான அச்சத்தால் தொழுகையை நிறைவேற்றும் பொழுது அது நமக்கு ஒரு பாரமான செயலாக இருக்காது. மேலும் இதயத்தில் இறைவனுடைய அச்சம் இல்லாமல், யாரோ ஒருவர் பாராட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் தொழுதால் தொழுகை கூட ஒரு பாரமான செயலாகத்தான் அமையும் என்ற கருத்தை மேலே குறிப்பிட்ட வசனத்தின் மூலம் நம்மால் உள்வாங்கிக் கொள்ள முடிகிறது.

நாளை மறுமையில் ஃபிர்தவ்ஸ் என்ற உயர்ந்த சொர்க்கத்தின் வாரிசுகளாக நியமிக்கப்பட்டவர்களிடம் இருக்கக்கூடிய சிறப்பம்சங்களில் முதன்மையானது தொழுகையில் பயபக்தியை மேற்கொள்வதுதான்.

‘இறைநம்பிக்கையாளர்கள் வெற்றி பெற்று விட்டார்கள். அவர்கள் எத்தகையோர் என்றால் தங்களுடைய தொழுகைகளில் பயபக்தியை மேற்கொள்கிறார்கள்’ (திருக்குர்ஆன் 23:1,2).

இதயத்தை சரியாகப் பயன்படுத்தத் தவறினால் நாம் தோல்வி அடைந்து விடுவோம். இதயத்தை சரியாகவும் தூய்மையாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். அதைப் பாவக்கறைகளாலும் அழுக்குகளாலும் துருப்பிடிக்காமல் பாதுகாக்க வேண்டும். இதயம் கல்லாக மாறாமல் மெல்லிய சதைத் துண்டாகவே இருக்க வேண்டும் என்றால்

வீண் பேச்சுகள் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

'வீண் பேச்சுகள் பேசுவது உங்களுடைய இதயத்தைக் கல்லாக மாற்றி விடும். கல்லாக மாறிய உங்களின் இதயம் இறை நினைவை விட்டு உங்களைத் தூரப்படுத்தி விடும்'. இறைவனிடத்தில் பிரார்த்தனை செய்வதை அதிகப்படுத்த வேண்டும். பிரார்த்தனை செய்யும் பொழுது அழுது மன்றாட வேண்டும். எப்போதெல்லாம் நமக்கு அழுகை ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் இதயம் மென்மையானதாகவும் மெல்லியதாகவும் மாறுகிறது.

'தன் இதயத்தைத் தூய்மைப்படுத்தியவன் வெற்றி பெற்று விட்டான்' (திருக்குர்ஆன் 91:9).

இதயம் தூய்மை அடைவதற்கு இறை நினைவு, தொழுகைகள், இபாதத்துகள் போன்றவை மட்டுமே கை கொடுக்காது. பிற மனிதர்களை இதயப்பூர்வமாக நேசிப்பது, அவர்களுக்கு நலனை நாடுவது, எல்லோருடனும் அன்பாக நடந்து கொள்வது, யாரையும் தரம் தாழ்ந்தவராகக் கருதாமல் இருப்பது, பிறரை மன்னிப்பது, பிறருக்காக பிரார்த்தனை செய்வது, பிறர் உள்ளம் நோகாமல் நடந்து கொள்வது, தான் விரும்பியதை தன் சகோதரருக்கும் விரும்புவது, பிற மனிதர்களைத் தன் சகோதரர்களாக ஏற்றுக் கொள்வது போன்ற உன்னத சிந்தனைகளாலும் செயல்களாலும் நம்முடைய இதயம் தூய்மை அடையும்.

இறைவன் இவ்வாறு கூறுகிறான், 'நிச்சயமாக முஃமின்கள் எல்லோரும் சகோதரர்களாவர்; எனவே, உங்கள் சகோதரர்களுக்கு மத்தியில் உங்கள் தொடர்புகளை சீராக்குங்கள். மேலும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் உங்கள் மீது கருணை பொழியப்படும்' (திருக்குர்ஆன் 49:10).

நாம் சகோதரத்துவத்தோடும் இறையச்சத்தோடும் வாழ்ந்தால் நாம் உளத்தூய்மை பெறுவதோடு, அல்லாஹ்வின் ரஹ்மத்தையும் (கருணையையும்) பெறுவோம் என்ற கருத்தை மேலே குறிப்பிட்ட வசனத்தின் மூலம் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

நாம் சிந்தித்து செயல்படுவதற்கும் இதயம் தூய்மையானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் அல்லாஹ்வின் அத்தாட்சிகளைப் பார்த்து நம்மால் படிப்பினை பெற முடியும். 'இதயமுள்ள அல்லது கவனத்தோடு செவிமடுக்கின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் திண்ணமாக, இந்த வரலாற்றில் படிப்பினையூட்டும் பாடம் இருக்கின்றது.' (திருக்குர்ஆன் 50:37).

சீரான இதயத்தைக் கொண்டிருப்பவர்கள் தான் படிப்பினைகள் பெறுவார்கள் என்பதாக அல்லாஹ் கூறுகிறான். 'ஜின் மற்றும் மனித வர்க்கத்தில் பெரும்பாலோரை நரகத்திற்காகவே நாம் படைத்திருக்கின்றோம். அவர்களுக்கு இதயங்கள் இருக்கின்றன; ஆயினும், அவற்றால் அவர்கள் சிந்தித்துணர்வதில்லை' (திருக்குர்ஆன் 7:179).

நாம் நாளை மறுமையில் இழப்படைந்தவர்களாக மாறுவதற்கு வெறுமனே ஷிர்க், குஃப்ர், வட்டி வாங்குதல், கொடுத்தல், ஹராமான உணவுகளை உண்பது, விபச்சாரம் செய்வது, தொழுகை, இபாதத்துகளை நிறைவேற்றாமல் இருப்பது போன்ற பாவமான செயல்கள் மட்டும் காரணமாக இருக்காது. இதயத்தைச் சீராகவும் சரியாகவும் பயன்படுத்தத் தவறினாலும் நாம் நாளை மறுமையில் இழப்புக்கு உள்ளாகிவிடுவோம் என்ற கருத்தை மேலே குறிப்பிட்ட வசனத்தின் அடிப்படையில் நம்மால் உள்வாங்கிக் கொள்ள முடிகிறது.

இதயத்தை மிகச் சரியாகப் பயன்படுத்தி, சிந்தித்து செயல்பட்டு நாளை மறுமையில் இறைவனின் திருப்தியையும் சொர்க்கத்தையும் நற்கூலியாகப் பெறுவோம். இதயம் காப்போம்.

# தனியாக நீ துணையாக யார்?

• அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

'மறுமை நாளில் இவர்கள் எல்லாரும் தனித்தனியாக அவனது திருமுன் வருவார்கள்' (திருக்குர்ஆன் 19:95)

திருக்குர்ஆனின் இந்த வசனம் மனித வாழ்க்கையின் மிகப் பெரியதோர் உண்மையை நமக்குத் தெளிவுபடுத்துகிறது. நாம் இந்த உலகிற்குத் தனியாக வந்தோம்; இந்த உலகை விட்டு தனியாகவே செல்லப் போகிறோம்; மறுமையில் எழுப்பப்படுவதும் தனியாக; இறுதியில் அல்லாஹ்வின் முன் நிற்க வேண்டியது கூட தனியாகத்தான்.

பிறக்கும் போது நம்முடன் யாரும் வரவில்லை. இறக்கும் போது நம்முடன் யாரும் வரப்போவதில்லை. கப்ரில் இறங்குவதும் தனியாகவே! மண்ணின் அடியில் நாமும் நமது நற்செயல்களும் மட்டும்தான்.

இந்த உலகில் நாம் பலரோடு இணைந்து வாழ்கிறோம். குடும்பம், உறவுகள், நண்பர்கள், சமூகம், அமைப்புகள் எனப் பல கூட்டங்களோடு நமது வாழ்க்கைப் பயணம் தொடர்கிறது. 'இவர் என் தந்தை', 'இவர் என் தாய்', 'இவர் என் சகோதரன்', 'இவர் என் நண்பன்', 'இவர் என் பிள்ளை' என்று பல அடையாளங்களோடு வாழ்கிறோம்.

ஆனால் உண்மை என்ன? இந்த உறவுகள் அனைத்தும் தற்காலிகமானவை. மறுமை நாளில் இவற்றில் பல அர்த்தமற்றதாகிவிடும்.

அல்லாஹ் கூறுகிறான்: 'அந்நாளில் மனிதன் தன் சகோதரனிடமிருந்தும், தன் தாயிடமிருந்தும், தன் தந்தையிடமிருந்தும், தன் மனைவியிடமிருந்தும், தன் பிள்ளைகளிடமிருந்தும் விரண்டு ஓடுவான்' (திருக்குர்ஆன் 80:34-36)

ஏனெனில் அன்றைய நாள் ஒவ்வொருவருக்கும் தங்களது நிலைமையே பெரும் கவலையாக இருக்கும்.

'அவர்களில் ஒவ்வொருவருக்கும் அந்நாளில் தன்னைத் தவிர வேறெவரைப் பற்றியும் கவனம் செலுத்தமுடியாத நிலை வந்தே தீரும்' (திருக்குர்ஆன் 80:37)

அந்த நாளில் ஒவ்வொருவரும் தனித்தனியாக வருவார்; தனித்து நிற்பார்; தனக்காகத் தானே பதில் சொல்ல வேண்டியவராக இருப்பார். அங்கு தன் நிலையைத் தவிர வேறு எவரது நிலையைப் பற்றியும் கரிசனை கொள்ள முடியாது.

மற்றொரு இடத்தில் அல்லாஹ் கூறுகிறான்: 'அந்நாளின் வேதனையிலிருந்து தப்பிக்க குற்றவாளி, தன் மக்களையே ஈடாகக் கொடுக்க விரும்புவான்; தன் மனைவியையும், தன் சகோதரனையும், தன்னைப் பாதுகாத்த சுற்றத்தாரையும், பூமியிலுள்ள அனைவரையும் ஈடாகக் கொடுத்து தப்பிக்க விரும்புவான்.'(திருக்குர்ஆன் 70:11-14)

இவ்வுலகில் தன் குழந்தைகளுக்காக உயிரையும் கொடுக்கத் தயங்காத மனிதன், மறுமையில் தப்பிக்க அவர்களையே பலி கொடுக்கத் தயாராகிறான். இதுவே அந்த நாளின் உண்மை நிலை. அன்றைய நாளில் செல்வமும் உதவாது. பிள்ளைகளும் உதவமாட்டார்கள். பதவியும் உதவாது. புகழும் உதவாது.

‘அந்நாளில் செல்வமும், பிள்ளைகளும் எவ்விதப் பயனும் அளித்திட மாட்டா. ஆனால், எந்தமனிதர் தூய்மையான உள்ளத் தோடு அல்லாஹ்வின் சமூகத்திற்கு வருகை தருகின்றாரோ அவரைத் தவிர! (திருக்குர்ஆன் 26:88, 89)

அப்போது நமக்குத் துணையாக வருவது என்ன? நமது ஈமான். நமது நற்காரியங்கள். மற்றவர்களின் இதயங்களில் நாம் விட்டுச் சென்ற நல்ல தடயங்கள்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘மனிதன் இறந்துவிட்டால் அவனுடைய செயல்கள் அனைத்தும் நின்று விடுகின்றன; மூன்றைத் தவிர: தொடர்ச்சியான தர்மம், பயன் தரும் அறிவு, அவனுக்காக துஆ செய்யும் நல்ல பிள்ளை’ (முஸ்லிம்)

இந்தப் பேருண்மையை மனதில் வைத்துக் கொண்டால், கூட்டத்தோடு கூட்டமாக சிந்திக் கக் கூடாது என்பதைப் புரிந்து கொள்வோம். பெரும்பான்மையினர் தவறான பாதையில் சென்றாலும், அநியாயத்தையும் அலட்சியத் தையும் வழக்கமாக்கிக் கொண்டாலும், நாம் அவர்களைப் பின் தொடரமாட்டோம்.

சத்தியப் பாதை அவசியம் பெரும்பான் மையினர் செல்லும் பாதையாக இருக்க வேண்டியதில்லை. ஓர் உண்மையான இறை நம்பிக்கையாளன் எதிர்நீச்சல் போடத் தயா ராக இருக்க வேண்டும். சமூக ஓட்டத்திற்கு எதிராக இருந்தாலும், அல்லாஹ்வுக்கு விருப்பமான பாதையில் உறுதியாக நிற்பதே வெற்றியின் அடையாளம்.

இதையே நபி(ஸல்) அவர்கள் மிக அழ காகச் சொன்னார்கள்: ‘மற்றவர்கள் போல் நடக்கும் ஆட்களாக நீங்கள் ஆகிவிடாதீர்கள். ‘மக்கள் நன்மை செய்தால் நாமும் நன்மை செய்வோம்; அவர்கள் அநியாயம் செய் தால் நாமும் அநியாயம் செய்வோம்’ என்று சொல்லாதீர்கள். மாறாக, உங்கள் மனங்களை உறுதியாக அமைத்துக் கொள்ளுங்கள். மக்கள் நன்மை செய்தால் நீங்கள் நன்மை செய்யுங்கள்; அவர்கள் தீமை செய்தாலும் நீங்கள் அநியாயம் செய்யாதீர்கள்’ (திர்மிதி)

ஆகவே பிறந்தது தனியாக, வாழ்வின் சுமையைச் சுமந்தது தனியாக, இறப்பது தனியாக, மண்ணறையில் இருப்பது தனி யாக, எழுப்பப்படுவது தனியாக, அல்லாஹ் வைச் சந்திப்பதும் தனியாக!

ஆனால் அந்தத் தனிமையை பயமற்றதாக அமைத்துக் கொள்வதே நம் முன்னால் உள்ள மிகப்பெரிய சவால். அதற்கான வழியை திருக்குர்ஆன் காட்டுகிறது:

‘வழித்துணைச் சாதனங்களைக் கொண்டு செல்லுங்கள். உண்மை யாதெனில், வழித் துணைச் சாதனங்களில் எல்லாம் மிக மேலா னது இறையச்சம்தான்’ (திருக்குர்ஆன்2:197)



● சேயன் இப்ராகிம்



# ஜவஹர்லால் நேருவும்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பதவிக்கு வந்து 4399 நாள்கள் நிறைவடைந்து விட்டதாம். இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவை விடவும் இவர் அதிக நாள்கள் பிரதமர் பதவியில் இருக்கிறாராம். இப்படிப் பெருமை கொண்டாடுகின்றனர் பாஜகவினர். பாஜகவினர் மட்டுமின்றி தேசிய ஜனநாயக கூட்டணியின் தலைவர்களும், ஏன் உலகத் தலைவர்களும் மோடியைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

உண்மையில் ஜவஹர்லால் நேரு 15.8.1947 முதல் 27.5.1964 வரை சுமார் 6310 நாள்கள் பிரதமர் பதவியில் இருந்துள்ளார். ஆனால் அவர் 1947 முதல் 1952 வரை நியமனப் பிரதமராகவே இருந்தார். 1952 ஆம் ஆண்டும், அதற்குப் பின்னர் அவர் 1957, 1962 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களிலும் வெற்றி பெற்று நாட்டின் பிரதமர் பதவியை அலங்கரித்தார். ஆனால் மோடி 2014 முதல் இன்றைய தேதி வரை தேர்தலில் நின்று வெற்றி பெற்று பிரதமராகப் பொறுப்பு வகிக்கிறார்.

எனவே நேரு நியமனப் பிரதமராக இருந்த காலத்தைக் கழித்து விட்டு, அவரை விட மோடியே அதிக காலம் பிரதமர் நாற்காலியில் இருக்கிறார் என்று ஒரு கணக்கைக் காட்டி, மோடியே நேருவை விட அதிக காலம் பிரதமர் பதவியை வகித்தவர் என வாதிடுகின்றனர். இந்திராகாந்தி 5835 நாள்கள் பிரதமர் பதவியில் இருந்துள்ளார். ஆனால் அது தொடர்ச்சியாக இல்லையாம். எனவே அதனையும் அவர்கள் கணக்கில் எடுக்கவில்லை. எப்படியோ ஒரு கணக்கைக் காட்டிப் பெருமிதம் கொள்கிறார்கள். கொள்ளட்டும். நமக்கு ஒன்றும் வருத்தம் இல்லை.

எனினும், ஜவஹர்லால் நேரு நரேந்திர மோடி ஆகிய இருவரின் ஆட்சியின் மாட்சியை ஒப்பீடு செய்வது இத்தருணத்தில் பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்.

## நேரு

ஜவஹர்லால் நேரு இந்திய விடுதலைப் போராட்டங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். ஆங்கிலேய ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளை எதிர்கொண்டவர். பல முறை ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர். விடுதலைப் போராட்டக் காலத்தில் அவர் சிறையிலிருந்த நாள்கள் 3159. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது அவர் கைது செய்யப்பட்டு 1142 நாள்கள் தொடர்ச்சியாக சிறைவாசம் அனுபவித்தார். அவர் மட்டுமல்ல, அவரது தந்தை மோதிலால் நேரு, தாய் சொரூபராணி, மனைவி கமலா பாய், சகோதரி விஜயலட்சுமி பண்டிட் என அவரது குடும்பமே விடுதலைப் போராட்டங்களில் கலந்து கொண்டது.

## மோடி

மோடிக்கு இத்தகைய பாரம்பரியம் எதுவும் இல்லை. அவர் 17.9.1950 அன்று அதாவது இந்திய விடுதலைக்குப் பின்னர் பிறந்தவர். எனவே அவருக்கு விடுதலைக்குப்



# நரேந்திர மோடியும்

போராட்டங்களில் கலந்து கொள்கின்ற வாய்ப்பு இல்லை. எனினும் அவர் எந்த இயக்கத்தின் பால் பற்றுறுவதி கொண்டிருக்கின்றாரோ அந்த இயக் கத்தின் தலைவர்கள் யாரும் விடுதலைப் போராட் டங்களில் கலந்துகொள்ளவில்லை.

## நேரு

இவர் நாட்டின் பிரதமராகப் பொறுப்பேற்ற போது நாடு பல்வேறு சிக்கலான பிரச்னைகளையும், சவால்களையும் சந்தித்து வந்தது. பிரிவினையின் போது பாகிஸ்தானிலிருந்து இலட்சக்கணக்கான இந்துக்கள் அகதிகளாக இந்தியாவுக்கு வந்தனர். அவர்களைக் குடியமர்த்தி அடிப்படை வாழ்வாதார வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டிய பெரும் பணி இருந்தது. சுயமாகச் செயல்பட்டு வந்த 480க் கும் மேற்பட்ட சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைக்க வேண்டிய தேவையும் இருந்தது.

விடுதலை பெற்ற சில மாதங்களிலேயே, பாகிஸ் தான் ஆதரவுப் படையினர் காஷ்மீரின் ஒரு பகுதியைக் கைப்பற்றினர். இந்தியாவுடன் இணைய விரும்பாத காஷ்மீர் மன்னருடன் உடன்படிக்கை செய்து கொண்டு அதன் பின்னர், காஷ்மீருக்கு இந்தியப் படையினரை அனுப்பி பாகிஸ்தான் ஆக்கிரமிப்பாளர்களை விரட்டி யடிக்க வேண்டிய ஓர் அசாதாரணமான சூழ்நிலையும் ஏற்பட்டது. நாடெங்கும் இந்து - முஸ்லிம் வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டு பெரும் உயிர்ச்சேதங்களும் பொருட்சேதங்களும் ஏற்பட்டன. இத்தகைய பல சவாலான பிரச்னைகளை ஜவஹர்லால் நேரு எதிர் கொண்டு அவற்றை வெற்றிகரமாகச் சமாளித்தார்.

நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கவும், தொழில்மயமாக்கவும் அவர் பெரும் நடவடிக்கை களை மேற்கொண்டார். பல நீர்ப்பாசனத் திட்டங் களை நிறைவேற்றினார். ஏராளமான தொழிற் சாலைகளை நிறுவ ஏற்பாடு செய்தார். ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் நாட்டின் திட்டமிட்ட விவசாய, தொழில் வளர்ச்சிக்கு அடிகோலினார். பொதுத் துறையை ஊக்குவித்தார். ஆயுள் காப்பீட்டு நிறுவ னத்தை அரசுடமையாக்கினார்.

## மோடி

இவர் ஆட்சிக்கு வந்த போது நேரு சந்தித்த நெருக்கடிகள் எதுவுமில்லை. எனினும் இவரது சில நடவடிக்கைகளே மக்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தின. பணமதிப்பு இழப்பு நடவடிக்கையை அதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். தேவையற்ற இந்த நடவடிக்கையால் மக்கள் தாங்கொணாத துயரத்திற்கு ஆளாயினர். கருப்புப் பணமும் வெளியே வரவில்லை. அதுபோலவே கொரோனா பெருந்தொற்றுக் காலத் திலும் இவர் மேற்கொண்ட நடவடிக் கைகளில் மக்கள் பெரிதும் சிரமத் திற்கு உள்ளாயினர். எந்தவிதமான முன்னெச்சரிக்கையும், மாற்று ஏற்பாடு களும் இல்லாமல் பொதுப் போக்கு வரத்தை முடக்கியதன் காரணமாக, பல்லாயிரக்கணக்கான மக்கள் பன்னூற் றுக்கணக்கான கிலோ மீட்டர்கள் நடந்தே தங்களது ஊர்களுக்குச் சென்றனர். நூற் றுக்கணக்கானோர் உயிரிழந்த சோக நிகழ்வுகளும் நடந்தன.

மோடி ஆட்சியின் போது பல பொதுத்துறை நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்பட்டன. விமானச் சேவை கூட தனியார் மயமாக்கப்பட்டது. பெரும் முதலாளிகளாக அம்பானியும், அதானியுமே உண்மையான ஆட்சி யாளர்களாக மாறி விட்டனர்.

## நேரு

மிகச் சிறந்த நாடாளுமன்றவாதி யாகத் திகழ்ந்தார். நாடாளுமன்றத்தை

மதித்தார். அந்த அவைக்குத் தவறாமல் சென்று வந்தார். கேள்வி நேரத்தின் போதும், விவாதங்களின் போதும் கலந்து கொண்டார். அவரது பதவிக் காலத்தில் ஹெச்.வி. ஹாமதி, பிலு மோடி, மசானி, பூபேஷ் குப்தா, மதுலிமாயி போன்ற எதிர்க்கட்சிகளைச் சார்ந்த ஜாம்பவான்கள் இருந்தனர். ஆட்சி குறித்த அவர்களது கடும் விமர்சனங்களுக்கெல்லாம் நேரு பொறுமையாகப் பதிலளித்தார்.

## மோடி

நாடாளுமன்றத்தை கோயில் என்ற வர்ணித்த இவர், அங்கு மிக அரிதாகவே வருகிறார். கேள்வி நேரத்தின் போது அவர் அவையில் இருப்பதேயில்லை. வரவு - செலவுத் திட்டம் சமர்பிக்கப்படும் போதும், அதற்குப் பதிலளித்து உரையாற்றும் போதும், ஜனாதிபதியின் உரையின் போதும், அதற்கும் பதிலளிக்க வேண்டிய போதும் மட்டுமே அவைக்கு வருகிறார். கடந்த 12 ஆண்டுகளில் 100 நாள்கள்கூட அவைக்கு வந்திருப்பாரா? ஐயமே!

## நேரு

வெளிநாடுகள் விஷயத்தில் நடுநிலைக் கொள்கையையே கடைப்பிடித்தார். நடுநிலை நாடுகளின் அமைப்பை உருவாக்கினார். உலகத்தில் எந்த ஒரு நாட்டிற்கும் எதிராக அநீதி இழைக்கப்பட்டால் அதற்காகக் குரல் கொடுத்தார். வல்லாதிக்க நாடுகளுக்கு அவர் அஞ்சவில்லை. எனினும், அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ஆதரவு தெரிவித்து வந்ததால், அவர் சற்று ரஷ்யா பக்கம் சாய்ந்தார். இந்த உறவு இந்தியாவிற்குப் பலனையே அளித்தது. இந்தியாவுடன் மேற்கொண்ட வர்த்தகங்களுக்கு ரஷ்யா டாலருக்குப் பதிலாக இந்திய ரூபாயையே வாங்கிக் கொண்டது. ஒவ்வொரு முறை வெளிநாட்டுப் பயணம் சென்று வந்தவுடன், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அது குறித்து அவர் அறிக்கை சமர்ப்பிப்பார். குடியரசுத் தலைவரைச் சந்தித்துப் பேசுவார்.

## மோடி

வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு வரும் இவர், அந்தப் பயணம், அந்த நாட்டு அதிபருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து ஒருபோதும் நாடாளுமன்ற அவைகளில் அறிக்கை சமர்ப்பித்ததில்லை. ஜனாதிபதியையும் சந்தித்து அது குறித்து எடுத்துரைப்பதில்லை. கடந்த சில ஆண்டுகளாக அவர் அமெரிக்காவுக்கு எதிராக எந்த ஒரு கருத்தையும் தெரிவிக்கவில்லை.

2025 ஆம் ஆண்டு மே மாதம் இந்தியா, பாகிஸ்தானிலுள்ள தீவிரவாத முகாம்களைத் தாக்கிய போது, நான் தான் தலையிட்டு அந்தப் போரை நிறுத்தினேன் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நூறு முறை சொல்லி விட்டார். ஆனால் இதற்கு மோடி இது வரை நேரடியாக மறுப்புத் தெரிவிக்கவில்லை. பாகிஸ்தான் நாட்டு இராணுவ தளபதிக்கு தனது வெள்ளை மாளிகையிலேயே ட்ரம்ப் விருந்து கொடுத்தார். இதனையும் மோடி கண்டுகொள்ளவில்லை. கண்டிக்கவுமில்லை.

**நேரு சுமார் 6310 நாள்கள் பிரதமர் பதவியில் இருந்துள்ளார். இந்திராகாந்தி 5835 நாள்கள் பிரதமர் பதவியில் இருந்துள்ளார்.**

ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்காதே என்று இந்தியாவை ட்ரம்ப் மிரட்டினால் மோடி ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்திக் கொண்டார். இப்படி எண்ணற்ற நிகழ்வுகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். சுருங்கக் கூறின் மோடி அரசின் அயலுறவுக் கொள்கை நடுநிலை சார்ந்தும் இல்லை. நியாயமாகவும் இல்லை.

## நேரு

நேரு மதச்சார்பின்மைக் கொள்கையில் உறுதியாக இருந்தார். சிறுபான்மை மக்களுக்கு இந்நாட்டில் வாழ்கின்ற உரிமை இருக்க வேண்டும் என்ற கொள்கையில் தனது ஆட்சிக் காலம் முழுமையும் உறுதியாகப் பற்றி நின்றார். காங்கிரஸ் கட்சியிலிருந்த சில முக்கியத்

தலைவர்கள் RSS சிந்தனை கொண்டவர்களாக இருந்த போதிலும் நேரு மதச்சார்பற்றவராகவே இருந்தார். எந்த சமயத்தினர் மீதும் அவர் வெறுப்புக் காட்டவில்லை.

## மோடி

இவர் இந்துத்துவக் கொள்கையில் உறுதியாக இருப்பவர் என்பது நாம் அறிந்ததே. நேருவின் மீது இவர் தொடர்ந்து குற்றம் சாட்டுவதற்குக் காரணம் அவர் மதச்சார்பின்மைக் கொள்கையில் உறுதியாக இருந்தார் என்பதற்காகவே! குஜராத்தின் முதல்வராக இருந்த போது அங்கு நடைபெற்ற கலவரத்தில் முஸ்லிம்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதை வேடிக்கை பார்த்தவரே இவர். பிரதமர் ஆன பின்னரும் அவர் முஸ்லிம் விரோதக் கொள்கையையே கடைப்பிடித்து வருகிறார். தேர்தல் பரப்புரைகளின் போது முஸ்லிம்களைப் பற்றி அவதூறு பேசுகிறார். முஸ்லிம்களின் நலன்களுக்காக குரல் கொடுக்கின்ற கட்சிகளை பாகிஸ்தானின் ஏஜெண்டுகள் என்று வசைபாடுகிறார்.

பாஜக ஆளுகின்ற மாநிலங்களில் இந்துத்துவ வெறியர்களால் முஸ்லிம்கள் கொல்லப்பட்ட போதும் புல்டோசர்களைக் கொண்டு முஸ்லிம்களின்வீடுகளும், வணிக நிறுவனங்களும் இறை இல்லங்களும் இடிக்கப்பட்ட போதும் கூட இவர் அதனைக் கண்டித்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. அனைத்து சமய மக்களையும் கொண்ட ஒரு நாட்டின் பிரதமர் என்பதையும் மறந்து அவர் முஸ்லிம்களின் மீது வெறுப்பினைக் கக்குகின்றார்.

## நேரு

இவர் ஒருபோதும் ஊடகங்களையும் பத்திரிகை நிருபர்களையும் சந்திக்கத் தவறியதில்லை. உள்நாட்டுப் பயணங்களின் போதும், வெளிநாட்டுப் பயணங்களின் போதும் பத்திரிகை நிருபர்களைத் தவறாது சந்தித்து தனது அரசின் நிலைப்பாடுகளை விளக்கிக் கூறுவார்.

## மோடி

இவர் இதற்கு நேர் எதிரானவர். இவர் உள்நாட்டில் பத்திரிகையாளர்களையோ அல்லது ஊடகவியலாளர்களையோ சந்திப்பது இல்லை. வெளிநாட்டிலும் இதே நிலை. யாராவது தொலைக்காட்சி, பத்திரிகை நிருபர்கள் கேள்வி கேட்டால், பதில் எதுவும் அளிக்காது அங்கிருந்து நகர்ந்து விடுகிறார். மாதந்தோறும் வானொலியில் பேசுவார். மக்கள் அதனைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேருவே நாட்டின் அனைத்துப் பிரச்னைகளும் காரணம் என இன்றைய பிரதமர் மோடி நாடாளு மன்ற அவைகளிலும், பொதுக்கூட்டங்களிலும் தொடர்ந்து பேசி வருகிறார். பாகிஸ்தான் கைப்பற்றிய காஷ்மீரின் ஒரு பகுதியை நேரு ஏன் அப்போது மீட்கவில்லை? பின்னர் வந்த இந்திரா காந்தியும், பிற காங்கிரஸ் பிரதமர்களும் ஏன் மீட்கவில்லை என்று அடிக்கடி கேள்வி எழுப்புகின்றார்.

**அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேருவே நாட்டின் அனைத்துப் பிரச்னைகளும் காரணம் என இன்றைய பிரதமர் மோடி நாடாளு மன்ற அவை களிலும், பொதுக்கூட்டங் களிலும் தொடர்ந்து பேசி வருகிறார்.**

சரி அவர்கள் மீட்கத் தவறிவிட்டனர் என்பதை ஒரு வாதத்திற்காக ஏற்றுக் கொள்வோம். கார்கில் போரின் போது ஏன் அன்றைய பிரதமர் வாஜ்பாய் அதனை மீட்கவில்லை. கடந்த ஆண்டு நடைபெற்ற போரில் (ஆபரேஷன் சிந்தூர்) ஏன் பிரதமர் நரேந்திர மோடி ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீரின் பகுதியை மீட்கவில்லை என்ற கேள்வி நம்முன் எழுகிறது. அதற்கு பிரதமர் மோடியிடம் பதில் உண்டா? இல்லை.

எப்படிப் பார்த்தாலும் ஜவஹர்லால் நேருவுக்கும், நரேந்திர மோடிக்கும் ஏணி வைத்தால் கூட எட்டாது. நேரு ஜனநாயக வாதி. சமய சார்ப்பற்றவர். மோடி ஜனநாயக நெறிமுறைகளில் நம்பிக்கை இல்லாத ஓர் இந்துத்துவவாதி.

# வாழ்வாதாரம் வழங்குபவன் அவனே

**உங்கள் செல்வங்களும், உங்கள் பிள்ளைகளும் உங்களை நம்மிடத்தில் மிகவும் நெருக்கமாக்கி வைக்கக்கூடியவை அல்ல; ஆயினும் நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிந்தவர்களைத் தவிர![57] அத்தகையவர்களுக்கே, அவர்கள் செய்த செயல்களின் கூலி இரு மடங்கு இருக்கிறது. மேலும், அவர்கள் உயர்ந்த மாளிகைகளில் நிம்மதியோடு இருப்பார்கள்.[58] ஆனால், எவர்கள் நம்முடைய வசனங்களைத் தோல்வியுறச் செய்வதற்காகக் கடும் முயற்சி செய்கின்றார்களோ அவர்கள் வேதனையில் ஆழ்த்தப்படுவார்கள்.**

**(நபியே, இவர்களிடம்) கூறும்: என்னுடைய இறைவன் தன் அடிமைகளில் தான் நாடுவோருக்கு தாராளமாய் வாழ்வாதாரம் வழங்குகின்றான். இன்னும் தான் நாடுவோருக்கு அளவோடு கொடுக்கின்றான்.[59] நீங்கள் செலவு செய்கின்றவற்றுக்குப் பகரமாக இன்னும் பலவற்றை அவனே உங்களுக்குத் தருகின்றான். வாழ்வாதாரம் வழங்குவோரில் அவன் மிகச் சிறந்தவனாவான்.[60]**

**● அத்தியாயம் 34 ஸபா ● திருவசனங்கள் : 37-39**

**57.** இதற்கு இரண்டு பொருள்கள். இரண்டுமே இங்கு சரியாகப் பொருந்துகின்றன. ஒன்று, 'அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தருபவை பணமும் பிள்ளைகளும் அன்று; அதற்குப் பதிலாக ஈமானும் நல்லறங்களும்தாம் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத்தரும்' என்று பொருள் கொள்ளலாம்.

இரண்டாவதாக, இந்தப் பணமும் பிள்ளைகளும் இறைநம்பிக்கை கொண்டு நல்லறங்களில் ஈடுபடுகின்றவருக்கு - தம்முடைய பணத்தை அல்லாஹ்வின் வழியில் செலவிடுகின்றவருக்கு, தம்முடைய பிள்ளைகளுக்கு நல்ல கல்வியும் பயிற்சியும் அளித்து, அவர்களை அல்லாஹ்வை உணர்ந்தவர்களாக, உத்தம நடத்தையைக் கொண்டவர்களாக ஆக்கிவிட முயல்கின்றவருக்கு - அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கான வழிவகைகளாய் இருக்கின்றன என்றும் பொருள் கொள்ளலாம்.

**58.** அவர்களின் இந்த அருள்வளம் நிலையானதாய், முடிவுறாததாய் இருக்கும்; மேலும் அவர்களுக்கு இந்த நற்கூலி வழங்கப்படுவது ஒருபோதும் நின்றுவிடாது என்கிற ஒரு நுட்பமான சமிக்ஞையும் இதில் இருக்கின்றது. ஏனெனில் எந்த அருள்வளத்தைக் குறித்து அது ஒரு கட்டத்தில் தீர்ந்துவிடும் என்கிற அச்சுறுத்தல் இருக்கின்றதோ அதனை மனிதனால் முழு மன நிறைவோடு ருசிக்கவே முடியாது. இந்த நிலையில் இவையெல்லாம் எந்த வேளையில் முற்றாக பறிபோய் விடுமோ என்கிற பதற்றம் அவரை எந்நேரமும் ஆட்டிப் படைத்துக் கொண்டே இருக்கும்.

**59.** அருள்வளங்களின் பெருக்கமும், பற்றாக்குறையும் அல்லாஹ்வின் நாட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றனவே தவிர, அவனுடைய விருப்பத்தைப் பொறுத்து அல்ல என்பதை வலுவாக அறிவுறுத்துவதற்காகத்தான் இந்தக் கருத்து

*28 ஆம் பக்கம் பார்க்க...*

**● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்**

# விலையை நிர்ணயிப்பது யார்?

**நபி(ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்தார். 'இறைத்தூதரே! நீங்கள் விலையை நிர்ணயம் செய்து விடுங்கள்' என இறைத்தூதரிடம் விண்ணப்பித்தார். நபி(ஸல்) அவர்கள் விடையளித் தார்கள்: 'இல்லை. அதற்கு மாறாக நான் இறைவனிடம் பிரார்த்திப்பேன்.' அதன் பிறகு இன்னொரு மனிதர் வந்தார். அவரும் அதே கோரிக்கையை முன் வைத்தார். 'இறைத்தூதரே! விலையை நிர்ணயம் செய்து விடுங்கள்'.**

**நபி(ஸல்) அவர்கள் விடையளித்தார்கள்: 'இறைவன் தான் விலைகளை ஏற்றவும் இறக்கவும் செய் கின்றான் என்பதுதான் உண்மை. எவரும் எனக்கு எதிராகப் புகார் கூறாத நிலையில், என் மீது எந்தச் சுமையும் இல்லாத நிலையில் மறுமை நாளில் இறைவனைச் சந்திக்கவே நான் விரும்புகின்றேன்.'**

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா(ரலி) நூல் : அபூதாவூத்

தானியங்களும் மற்றவையும் மலிவான விலையில் கிடைப்பதை உறுதி செய்யுங்கள். மக்களின் கவலைகளுக்கு முற்றுப்புள்ளி வையுங்கள் என்கிற நோக்கத்துடன்தான் இந்த விண்ணப்பம் அன்பு நபிகளாரிடம் செய்யப்பட்டது.

பொதுவாக நிலைமைகளைப் பொறுத்தே தானியங்களின், பிற பொருள்களின் விலைவாசி உயர்வதும் சரிவதும் நடக்கின்றது. நிலைமை எப்போது எப்படி மாறும் என்பது இறைவனின் கையில்தான் இருக்கின்றது. நிலைமைகளை மாற்றுகின்ற வலிமையும் அதிகாரமும் இறைவ னிடம்தான் இருக்கின்றது.

இந்த நிலையில் இயற்கைக்கு விரோதமான முறையில் வலுக்கட்டாயமாக பொருள்களின் விலையை நிர்ணயம் செய்வது பொருளாதாரக் கொள்கைகளுக்கு நேர்மாறானதாகும். இதனால் தான் என்னுடைய எந்தவொரு நடவடிக்கையாலும் யாருக்கும் அநீதி நிகழ்ந்துவிடக் கூடாது. நாளை மறுமையில் எவரும் எனக்கு எதிராகப் புகார் கொண்டு வந்துவிடக் கூடாது என அஞ்சு வதாக நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மழை பெய்யத் தவறுவதாலோ, போதுமான விளைச்சல் இல்லாமல் போவதாலோ வேறு ஏதேனும் இயற்கையான காரணங்களாலோ தானியங்களின் விலை ஏறிவிடுவதுண்டு. சில சமயம் வியாபாரிகளே கொள்ளை இலாபம் ஈட்டுகின்ற எண்ணத்தோடு விளைபொருள்களைப் பதுக்கி வைத்து செயற்கையான பஞ்சத்தை ஏற்படுத்தி தானியங்களின் விலையை ஏற்றிவிடு வதுண்டு. இது போன்ற சூழல்களில் தக்க நடவடிக்கை எடுப்பதற்கு ஆட்சியாளர்களுக்கு அதி காரம் உண்டு.

பொருள்களைப் பதுக்கி வைத்து செயற்கைப் பஞ்சத்தை உருவாக்கி தானியங்களின் விலை யைத் தாறுமாறாக ஏற்றி மக்களை வியாபாரிகள் அலைக்கழித்துக் கொண்டிருக்கின்றார்கள் எனத் தெரிய வந்தால் அத்தகைய சூழல்களில் ஆட்சியாளர்கள் தலையிடலாம்.

ஆட்சியாளர்களின் அறிவுறுத்தலுக்குப் பிறகும் வியாபாரிகள் தம்முடைய போக்கை மாற்றிக் கொள்ளவில்லையெனில் ஆட்சியாளர்களே மக்கள் மேன்மேலும் சுரண்டப்படுவதைத் தடுப்பதற் காகவும் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காகவும் விலைவாசியை நிர்ணயித்து விடலாம்.

உமர்(ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஒரு முறை உலர் திராட்சை வியாபாரி ஒருவர் மிக அதிக விலையில் விற்றுக்கொண்டிருந்தார். உமர்(ரலி) அவர்களின் கவனத்திற்கு இது கொண்டு செல்லப்பட்டதும் அவர் அந்த வியாபாரியை அழைத்தார். 'நியாயமான விலையில் விற்பனை செய்யப் பார். உம்மால் அப்படி விற்க முடியாது எனில் உம்முடைய சரக்கை சந்தையிலிருந்து எடுத்துக் கொண்டு வெளியேறு' என்று அவரிடம் கறாராகச் சொல்லி அனுப்பினார்.

**நபிமொழி விளக்கம் ✦ மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான் ✦ தமிழில் : அபூ ஹானியா**

*26 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

மீண்டும் மீண்டும் எடுத்துரைக்கப்படுகின்றது. இறைவனின் நாட்டத்தோடு நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும் என எல்லாவகையான மனிதர்களுக்கும் அருள்வளங்கள் கிடைத்துக் கொண்டே இருக்கின்றன.

இறைவனை ஏற்றுக் கொண்டவனுக்கும் அவனுடைய அருள்வளம் கிடைத்துக் கொண்டே இருக்கின்றது; இறைவனே இல்லை என்று முழங்குகின்றவனுக்கும் அருள்வளம் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. ஒருவருக்கு மிகப் பெரும் அளவில் அருள்வளங்கள் அருளப்பட்டிருப்பதாலேயே அவர் இறைவனுக்கு விருப்பமானவர் ஆகிவிடவும் மாட்டார். அது அதற்கான சான்றாகவும் ஆகி விடாது.

இதே போன்று ஒருவருக்கு அருள் வளங்கள் சொற்பமான அளவிலேயே வழங்கப்பட்டிருப்பதும் அவர் மீது இறைவன் கோபமாக இருக்கின்றான் என்பதற்கான சான்று ஆகிவிடாது. இறைநாட்டத்தின்படி ஒரு கொடுமைக்கார, இறைவன் மீது நம்பிக்கையே இல்லாத மனிதனுக்கு அனைத்துச் செல்வங்களும் அதிக அளவில் தரப்படுகின்றது. இத்தனைக்கும் கொடுமையையும் நாணயமும் நம்பிக்கையும் இல்லாத நடத்தையையும் அல்லாஹ் விரும்புவதில்லை. மேலும் இதற்கு நேர்மாறாக அதே இறைவனின் நாட்டத்தின் அடிப்படையில் உண்மையான, திடமான நம்பிக்கையைக் கொண்ட மனிதனோ பெரும் பெரும் இழப்புகளைச் சந்திக்கிறான்; சிரமங்களை எதிர்கொள்கின்றான்.

இத்தனைக்கும் இந்தப் பண்புகள் இறைவனுக்கு மிகவும் பிடித்தமான பண்புகள்தாம். எனவே உலக ஆதாயங்களையும் இலாபங்களையும் நன்மை, தீமைக்கான அளவுகோலாக அறிவிப்பவன் கடுமையான வழிகேட்டில் விழுந்தவன் ஆவான். இறைவனின் உவப்புதான் அசலான விஷயமாகும். இறைவனுக்கு விருப்பமான ஒழுக்க மாண்புகளைக் கடைப்பிடிப்பதன் மூலமாகத்தான் அதனைப் பெற முடியும். இந்தப் பண்புகளுடன் எவருக்கேனும் உலகத்தின் அருள் வளங்களும் கிடைக்கின்றனவெனில் அது ஐயத்திற்கிடமின்றி அல்லாஹ்வின் மிகப் பெரும் அருளாகும். அதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

ஆனால் ஒழுக்க மாண்புகளின் அடிப்படையில் பார்க்கின்ற போது ஒருவர் இறைவனுக்கு எதிராகக் கலகம் செய்பவராக, இறைவனுக்கு மாறு செய்பவராக இருக்க, அவர் மீது உலக வளங்கள் மிக அதிகமாகப் பொழியப்படுகின்றது எனில் அவர் மிகக் கடுமையான விசாரணைக்காகவும், மிக இழிவான தண்டனைக்காகவும் தம்மைத் தாமே ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கின்றார் என்றே அதற்குப் பொருள்.

**60.** இறைவன்தான் உணவளிப்பவனாக, வாழ்வாதரங்களை வழங்குபவனாக, படைப்பாளனாக, வடிவம் தருபவனாக, அருள் வளங்களை அள்ளித் தருபவனாக, கொடையாளியாக இருக்கின்றான். இது போன்று இன்னும் ஏராளமான பண்புகள் இறைவனுக்கு மட்டுமே உரித்தானவையாகும். என்றாலும் அடியார்கள் மீது இது போன்ற பண்புகளை உருவகப்படுத்துகின்ற விதத்தில் சாற்றி விடுவதுண்டு.

எடுத்துக்காட்டாக, இன்ன மனிதர் ஏராளமானோருக்கு வாழ்வாதாரத்தை வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்துவிட்டார் என்றோ, இன்னார் இந்தக் கொடையை வழங்கியிருக்கின்றார் என்றோ, இன்னார் இன்ன பொருளை உருவாக்கியிருக் கின்றார், இன்ன பொருளுக்கு வடிவம் தந்திருக்கின்றார் என்றோ இன்ன பொருளைக் கண்டுபிடித்திருக்கின்றார் என்றோ உருவாக்கியிருக்கின்றார் என்றோ சொல்கின்றோம். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் இங்கு வல்லமையும் மாண்பும் நிறைந்த அல்லாஹ் இங்கு தனக்காக கைருல் ராஸிகீன் என்கிற சொல்லை ஆண்டிருக்கின்றான். அதாவது நீங்கள் எந்த மனிதர்களைக் குறித்து வாழ்வாதாரங்களைத் தருபவர் என்று கணித்திருக்கின்றீர்களோ அவரைப் போன்ற அனைவரையும் விட மிகச் சிறப்பான வாழ்வாதாரத்தைத் தருபவனாக வல்லமையும் மாண்பும் நிறைந்த இறைவன் இருக்கின்றான்.

*(தொடரும்)*

• சே.முஹம்மத் ஷகீல்

# வாழ்க்கையின் இலட்சியம்

நாம் அனைவரும் வாழ்க்கையில் ஓர் இலட்சியத்தை அடிப்படையாக வைத்துத் தான் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். என்ன இலட்சியம்? சிலருக்கு மருத்து வராக வேண்டும் என்ற இலட்சியம்; சிலருக்குப் பொறியாளராக வேண்டும் என்ற இலட்சியம்; சிலருக்கு நிறைய பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற இலட்சியம்; சிலருக்குப் பெரிய வீடு, கார் வாங்க வேண்டும் என்ற இலட்சியம்; சிலருக்குப் பிரபலமாக வேண்டும் என்ற இலட்சியம் என நம் அனைவரும் ஓர் இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு தான் ஓடிக்கொண்டிருக்கின்றோம். அதே சமயம் இன்னும் சிலர் வாழ்க்கையில் எந்த இலட்சியமும் இல்லாமல் 'பிறந்து விட்டோம், ஏதோ வாழ்வோம்' என்று வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.



இலட்சியம் ஒவ்வொரு மனிதனுக்கும் கட்டாயம் இருக்க வேண்டும். 'வாழ்க்கையில் இலக்கில்லாமல் வாழ்பவன், இருளில் விளக்கில்லாமல் செல்பவன் போன்றவன்'. நாம் எந்த இலட்சியப் பாதையை நோக்கிப் பயணிக்க வேண்டும்? நாம் எந்த இலட்சியத்தை அடைவதற்காக உழைக்க வேண்டும்? நாம் அடைய விரும்பும் இலட்சியத்தை அறிந்திருக்கின்றோமா? அதற்காக உழைக்கின்றோமா? அந்த இலட்சியம் குறித்துப் பிறருக்கு உணர்த்தியிருக்கிறோமா?

### எது வாழ்வின் இலட்சியம்?

சுவனத்தை அடைவதுதான் நமது வாழ்வின் இலட்சியம். அந்த இலட்சியத் தைக் குறித்து இறைவன் இவ்வாறு கூறுகிறான்: 'அதன் மீது கஸ்தூரி முத்திரை பதிந்திருக்கும். போட்டியிட்டு முந்திக்கொள்ள முயல்பவர்கள், இதனை அடைந்து

கொள்வதில் முந்திக் கொள்ள முயலட்டும்!' (திருக்குர்ஆன் 83:26)

'உங்கள் இறைவனுடைய மன்னிப்பை நோக்கியும் வானம், பூமியின் அளவிற்கு விசாலமான சுவனத்தை நோக்கியும்! அல்லாஹ்வின் மீதும், அவனுடைய தூதர்களின் மீதும் நம்பிக்கை கொண்டவர்களுக்காக அது தயார் செய்யப்பட்டிருக்கின்றது. இது அல்லாஹ்வின் அருளாகும்.' (திருக்குர்ஆன் 57:21)

அப்படியெனில் டாக்டராக வேண்டும், பொறியாளராக வேண்டும் என்பதெல்லாம் நமது இலட்சியம் இல்லையா? அவையெல்லாம் நமது இலட்சியம் அல்ல; நமது ஆசைகளும் வாழ்க்கையின் தேவைகளுமே! ஆனால், நாம் தேவையை இலட்சியமாக்கிக் கொண்டதன் விளைவுதான் நமது உண்மையான இலட்சியத்தை மறந்து விட்டோம்.

மூன்று விதமான மனிதர்கள் இருக்கின்றார்கள். 1. சுவனத்தை அறிந்து அதற்காக உழைத்துக் கொண்டிருப்பவர். 2. சுவனத்தை மறுக்கக்கூடியவர். 3. சுவனத்தை அறிந்தும் அதற்காக உழைக்காமல் இருப்பவர்.

இதில் முதலாமவர்தான் வெற்றி பெறுவார்; அந்த இலட்சியத்தை அடைவார். நாம் இந்த மூன்று தரப்பினரில் யாராக இருக்க விரும்புகின்றோம்?

பத்ர் போர் நடைபெற்ற நேரத்தில் நபி(ஸல்) அவர்கள், 'எவரது உள்ளம் உறுதியுடனும், நன்மையை நாடியும், பின் வாங்காமலும் இருக்குமோ, அத்தகையவர் இன்று கொல்லப்பட்டால், வானங்கள் மற்றும் பூமியின் அகலத்திற்கு நிகரான சுவனத்தில் அவர் நுழைவார்' என்று கூறினார்கள். அப்போது அன்சாரித் தோழர் உமைர் இப்னுல் ஹுமாம்(ரலி) அவர்கள், தம் கையில் இருந்த சில பேரீச்சம் பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். நபி(ஸல்) அவர்களின் வார்த்தைகளைக் கேட்ட அவர், 'வியப்பு வியப்பு (பகின் பகின்)' என்றார்.

நபி(ஸல்) அவர்கள் அவரிடம், 'ஏன் அப்படிச் சொன்னீர்?' எனக் கேட்டார்கள். அதற்கு அவர், 'அல்லாஹ்வின் தூதரே! நான் அந்தச் சுவனவாசிகளில் ஒருவனாக வேண்டும் என்ற ஆசையில் தான் அவ்வாறு கூறினேன்' என்றார். நபி(ஸல்) அவர்கள், 'நிச்சயமாக நீர் அவர்களில் ஒருவர்தான்' என்று கூறினார்கள். உடனே உமைர்(ரலி) அவர்கள், தமக்குள்ளேயே, 'இந்தப் பேரீச்சம் பழங்களை நான் சாப்பிட்டு முடிக்கும் வரை உயிர் வாழ்ந்தால், அது மிக நீண்டதொரு வாழ்க்கையாகி விடுமே!' என்று கூறிவிட்டு, கையிலிருந்த பேரீச்சம் பழங்களை அப்படியே வீசி எறிந்துவிட்டு, போர்க்களத்தில் குதித்துப் போரிட்டு வீரமரணம் அடைந்தார்'. (ஸஹீஹ் முஸ்லிம்: 3848)

உஹுத் போரின் போது முஸ்லிம்கள் சற்றே நிலைகுலைந்திருந்தார்கள். 'நபி(ஸல்) அவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள்' என்ற வதந்தி பரவிய நேரம் அது. பல நபித்தோழர்கள் செய்வதறியாது சோகத்தில் அமர்ந்திருந்தனர். அப்போது அங்கு வந்த

**நாம் எந்த இலட்சியத்தை அடைவதற்காக உழைக்க வேண்டும்? நாம் அடைய விரும்பும் இலட்சியத்தை அறிந்திருக்கின்றோமா? அதற்காக உழைக்கின்றோமா? அந்த இலட்சியம் குறித்துப் பிறருக்கு உணர்த்தியிருக்கிறோமா?**

அனஸ் இப்னு நழ்ர்(ரலி) அவர்கள், அமர்ந்திருந்தவர்களிடம் 'நீங்கள் ஏன் இங்கே அமர்ந் திருக்கிறீர்கள்?' என்று கேட் டார்கள். அதற்கு அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் கொல்லப் பட்டு விட்டார்களே!' என்றார். அதற்கு அனஸ்(ரலி) அவர்கள் மிக உறுதியாகச் சொன்னார்கள்: 'அல்லாஹ்வின் தூதர் இறந்துவிட்டால், அதற்குப் பிறகு உயிர்வாழ்ந்து நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? எழுந்து போரிடுங்கள்! அல்லாஹ் வின் தூதர் எதற்காக மரணித் தார்களோ, அதற்காகவே நீங்களும் மரணியுங்கள்!' பிறகு அவர் போர்க்களத்தை நோக்கி விரைந்தார். எதிர்ப் பட்ட ஸஅத் இப்னு முஆத்(ரலி) அவர் களிடம், 'ஸஅதே! இதோ உஹத் மலைக்கு அப்பாலிருந்து சுவனத்தின் வாசனையை நான் நுகர்கிறேன்!' என்று கூறிவிட்டுப் போர்க்களத்திற்குள் பாய்ந்தார்.

**இந்த உலக வெற்றிக்காக உழைக்கும் நாம் நமது உண்மையான மறுமை வெற்றிக்காகப் பாடுபட வேண்டும். இந்த உலக இலக்குகள் எப்படி முக்கியமானதோ அதை விடப் பலமடங்கு மறுமை வெற்றி முக்கியம். இரண்டிற்கும் நாம் முக்கியத்துவம் தரவேண்டும். ஒன்றை நினைத்து மற்றொன்றை விட்டுவிடக்கூடாது.**

இந்த உலக வெற்றிக்காக உழைக்கும் நாம் நமது உண்மையான மறுமை வெற் றிக்காகப் பாடுபட வேண்டும். இந்த உலக இலக்குகள் எப்படி முக்கியமானதோ அதை விடப் பலமடங்கு மறுமை வெற்றி முக்கி யம். இரண்டிற்கும் நாம் முக்கியத்துவம் தர வேண்டும். ஒன்றை நினைத்து மற்றொன்றை விட்டுவிடக்கூடாது.

'உறவை முறித்தவன் சுவனத்தில் நுழைய முடியாது' என்று நபி(ஸல்) அவர்கள் கூறி னார்கள். ஆனால், இன்று நம் சமூகத்தில் சொத்துப் பிரச்னையால் அடித்துக்கொண்டு உறவை முறித்தவர்கள் எத்தனை பேர்? இந்த இலட்சியத்தைத் தன் வாழ்க்கை யாகக் கொண்டு வாழாததுதான் இதற்கான காரணம்.

'சுவனத்தின் திறவுகோல் தொழுகை' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அந்த இலட்சியத்தின் திறவுகோலிலேயே நமது நிலையைப் பாருங்கள். வாழும் காலத் தில் நன்மையான காரியங்களைச் செய்து இறைவன் தடுத்ததைத் தவிர்ந்து, இன்பங் களை இறைவன் அனுமதித்த முறையில் சுவைத்து இம்மையிலும் மறுமையிலும் வெற்றி அடைவதுதான் நமது இலட்சியம் என்பதை நாம் தெளிவுபெற வேண்டும். இந்த வாழ்வு ஒரு தேர்வுக்கூடம். அந்தச் சுவனத்தை அடைவதற்கான தேர்வு. இங்கு சிந்திய கண்ணீர், அங்கு புன்னகையாக மாறும். இங்கு பொறுமையாகத் தாங்கிய அவமானம், அங்கு மரியாதையாக மாறும். இந்த உலகம் நம்மைத் துன்புறுத்தியிருந் தால், நாளை சுவனம் நம்மை அரவணைக் கும்.

இந்த உலகத்தோடு எல்லாம் முடிந்து விடுவதில்லை. இறப்பிற்குப் பிறகு ஒரு வாழ்க்கை இருக்கிறது. அது நிரந்தரமான வாழ்க்கை. எப்படி இந்த உலகில் வெற்றி பெற அயராது உழைக்கின்றோமோ அது போல மறுமையில் வெற்றிபெற அயராது உழைக்க வேண்டும். அந்த உண்மையான இலட்சியத்தை அடைவதற்காக இந்த உலக வாழ்வை அமைத்துக் கொண்டால் இந்த உலகிலும், மறுமையிலும் நாம் வெற்றி பெறலாம்.

● மௌலவி **முஹம்மது யூசுஃப் அன்சாரி** கலீமி

***இன்றைய இளைஞர்களிடம் அரசியலைப் பற்றிக் கேட்டால் அரசியலுக்கும் தங்களுக்கும் தொடர்பில்லாதது போல் தான் பதில் வரும். அரசியல் சாக்கடை என்பது பொதுப்புத்தியில் பதிவாகி விட்ட செய்தி. செய்தித்தாள்களைத் திறந் தாலும், சமூக வலைதளங் களைப் பார்த்தாலும் அரசியல் மீதான வெறுப்பு இன்றைய தலைமுறையினரிடம் ஆழமாக வேரூன்றி இருப்பதைக் காண முடிகிறது.***



இன்றைய நிகழ்கால அரசியல் சூழலையும் அதற்கு நேர்மாறாக வரலாற்றில் நேர்மையின் அடையாளமாகத் திகழ்ந்த இஸ்லாமிய அரசியல் உதாரணங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பது அரசியலை உள்ளார்ந்து புரிந்துகொள்ள உதவும்.

இன்றைய காலகட்டத்தில் அரசியல் என்பது மக்கள் சேவை என்பதிலிருந்து மாறி லாபம் தரும் வியாபாரமாகவோ அல்லது அதிகாரத்தை அடையும் குறுக்கு வழியாகவோ மாறிவிட்டது. இன்று ஒரு சாதாரண மனிதன் தேர்தலில் போட்டியிடுவது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. தேர்தலின் போது வாக்குக்குப் பணம் கொடுப்பதும், வெற்றி பெற்ற பிறகு பல மடங்கு சொத்துகளைக் குவிப்பதும் இன்று உலக அளவிலும் உள்ளூர் அளவிலும் நாம் காணும் அன்றாட நிகழ்வுகளாகி விட்டன.

மக்கள் கட்டும் வரிப்பணம், பொது நலனுக்காக முழுமையாகப் பயன்படுத்தப்படு கிறதா? என்பது மிகப்பெரிய கேள்விக்குறி. ஓர் அவசியத் தேவைக்காக அரசு சார்ந்த அலுவலகங்களை நாடி நாம் செல்கிறபோது அரசு அலுவலர்களின் செயலும், தேவையற்ற கால தாமதமும், நிலுவையில் கிடத்துவதும் அரசு, அரசியலின் மீதான வெறுப்பை பன் மடங்கு அதிகப்படுத்துகிறது.

அரசு அலுவலர்களுக்கு அறிமுகமான நபர்களின் உதவியை நாடுவதும், அரசு நிர்ண யித்த கட்டணத்தை விட பன்மடங்கு தொகையைச் செலுத்தினால்தான் வேலை நடக்கும் என அவர்கள் ஊழலுக்கு நியாயம் கற்பிப்பதும் அரசியல் மீதான அவநம்பிக்கையை மக்களின் மனதில் மிக ஆழமாய் பதிந்திருக்கிறது. பல அரசு ஒப்பந்தங்கள், உள்கட்டமைப்புத் திட்டங்களில் நடைபெறும் ஊழல்கள், அரசியல்வாதிகள் மீதான மக்களின் நம்பிக்கையை முற்றிலும் சிதைத்துவிட்டன.

பதவியைத் தக்கவைக்க சாதி, மதம், இனம், மொழி ஆகியவற்றின் பெயரால் மக்க ளைப் பிளவுபடுத்தி, வெறுப்பு உணர்வை விதைத்து பிரித்தாளும் சூழ்ச்சி இன்றைய அரசியலுக்கு முக்கிய ஆயுதமாகிவிட்டது.

# இன்றைய அரசியலும் வரலாற்றுப் படிப்பினைகளும்

அரசியல் வெற்றிக்காக தங்களை மதச் சார்பற்ற கட்சி என விளம்பரப்படுத்துவதும் பிறகு தன் பதவியைத் தக்க வைத்துக் கொள்ள மதவாத, இனவாதக் குழுக்களுடன் வெட்கமே இல்லாமல் கூட்டணி வைத்துக் கொள்வதும் மக்கள் நல அரசியலுக்கு ஏற்பட்ட இழுக்காகும்.

கொள்கைக்காக அல்லாமல், பதவிக்காக மட்டுமே நேற்றைய எதிரிகள் இன்றைய நண்பர்களாக மாறுவதும், மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை காற்றில் பறக்க விடுவதும் அரசியலைச் சாக்கடையாகக் காட்டுகின்றன. 2026 ஏப்ரல் 24ஆம் தேதி ஆம் ஆத்மி கட்சியில் இருந்து ராகவ் சத்தா, ஸ்வாதி மாலிவால், முன்னாள் கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங், ராஜிந்தர் குப்தா, அசோக் மிட்டல் உள்பட 7 எம்.பி.க்கள் பாஜகவில் இணைந்தனர். இதுபோன்ற நிகழ்வுகள் அரசியல் மீதான வெறுப்பை மக்கள் மனதில் மேலும் அதிகரிக்கச் செய்தது.

### இஸ்லாமிய அரசியல் வரலாறு

அரசியல் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு வரலாற்றில் பல சிறந்த எடுத்துக் காட்டுகள் உள்ளன. குறிப்பாக இஸ்லாமிய அரசியல் வரலாற்றில் பதவி என்பது வாழ்க் கையை அனுபவிப்பதற்கான உரிமை அல்ல; அது இறைவனாலும் மக்களாலும் வழங் கப்பட்ட மாபெரும் பொறுப்பு என்ற அடிப் படைத் தத்துவம் பின்பற்றப்பட்டது.

இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் இரண்டா வது கலீஃபாவான உமர் இப்னு அல்கத்தாப் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலம் நீதிக்கான சிறந்த உதாரணமாகும். ஒருமுறை இரவு நேரத்தில் நகர்வலம் வந்த உமர்(ரலி), ஒரு வீட்டில் குழந்தைகள் பசியால் அழுவதையும், தாய் அவர்களை சமாதானப்படுத்த வெறும் தண்ணீரைக் கொதிக்க வைத்து, தன் பிள்ளை களிடம் உணவு தயார் செய்வது போல் நடித்துக் கொண்டிருப்பதையும் கண்டார். உடனே அரசுக் கருவூலத்திற்குச் சென்று, உணவு மூட்டையைத் தமதுதோளிலேயே சுமந்து வந்து அந்த குடும்பத்திற்குக் கொண்டு வந்து கொடுத்தார்.

வேலையாட்கள் யாரிடமாவது கொடுத்து அனுப்பலாமே? என்று சக தோழர்கள் கேட் டதற்கு, மறுமை நாளில் என் சுமையை நான் தானே சுமக்க வேண்டும் என்று பதிலளித்தார். ஒரு நாட்டின் அதிபர் சாதாரண குடிமகனின் பசிக்குத் தன்னை முழுமையாகப் பொறுப் பாக்கிக் கொண்ட நிகழ்வு இது.

அதிகாரத்தில் இருப்பவர்களை சாதா ரண மக்கள் கேள்வி கேட்பது இன்று தேசத் துரோகமாகப் பார்க்கப்படலாம். ஆனால், இஸ்லாமிய வரலாற்றில் அது ஒரு குடிமகனின் உரிமையாக இருந்தது.

கலீஃபா உமர்(ரலி) அவர்கள் பள்ளி வாசலில் உரையாற்றிக் கொண்டிருந்தபோது, ஒரு சாதாரண குடிமகன் எழுந்து 'உங்களுக்கு வழங்கப்பட்ட துணியின் அளவைக் காட்டி லும் உங்கள் சட்டை மட்டும் எப்படி நீளமாக இருக்கிறது? இதற்கு நீங்கள் பதிலளிக்கும் வரை உங்கள் பேச்சை நாங்கள் கேட்க மாட்டோம்' என்று தடுத்தார். கோபப்படாமல் உமர்(ரலி) தன் மகனை அழைத்து விளக்கச் சொன்னார். தன் தந்தையின் உயரத்திற்குத் துணி போதவில்லை என்பதால், தனது பங்கையும் தந்தைக்குக் கொடுத்து சட்டை தைக்கச் சொன்னதாக மகன் விளக்கமளித்த பின்னரே மக்கள் அவர் பேச்சைக் கேட்கத் தயாரானார்கள். ஆனால் இன்றோ பத்திரி கையாளர் சந்திப்பை முற்றிலும் வெறுக்கும் அரசியல்வாதிகளை நாம் பார்க்க முடிகிறது.

பொதுச் சொத்தை எப்படிக் கையாள வேண்டும் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம்

உமர் இப்னு அப்துல் அஸீஸ்(ரஹ்) அவர்களின் ஆட்சிக் காலம். ஒருமுறை அவர் அரசுப் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது, அவரைச் சந்திக்க அவரது நண்பர் ஒருவர் வந்தார். தன் நண்பர் வந்ததும், எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்துவிட்டு, வேறு ஒரு விளக்கை ஏற்றினார் உமர் இப்னு அப்துல் அஸீஸ்(ரஹ்). வியப்புடன் நண்பர் காரணம் கேட்டபோது, 'இதுவரை நான் அரசுப் பணியில் இருந்தேன், அதனால் அரசுக்குச் சொந்தமான விளக்கு எரிந்தது. இப்போது தனிப்பட்ட முறையில் பேசப் போகிறேன், பொது மக்களின் வரிப்பணத்தில் வாங்கிய எண்ணெயை என் தனிப்பட்ட காரியத்திற்கு நான் பயன்படுத்தக் கூடாது' என்றார்.

### நாம் என்ன செய்ய வேண்டும்?

மேற்கண்ட வரலாற்று நிகழ்வுகள் நமக்கு உணர்த்துவது ஒன்றைத்தான். அரசியல் என்பது அடிப்படையில் சாக்கடை அல்ல; அது ஒரு மக்கள் பணி. அதிகாரத்தில் அமர்பவர்களின் சுயநலமும், ஊழலுமே அதைச் சாக்கடையாக மாற்றுகின்றன. அரசியலை வெறும் சாக்கடை என்று ஒதுங்கிச் செல்வதால் எந்த மாற்றமும் வந்து விடப் போவதில்லை. நல்லவர்கள் ஒதுங்கி இருப்பதால்தான் தவறானவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுகின்றனர்.

இஸ்லாமிய வரலாற்று ஆட்சியாளர்கள் காட்டிய வெளிப்படைத்தன்மை, மக்கள் மீதான அளப்பரிய அக்கறை, பொதுச் சொத்தைப் பாதுகாக்கும் நேர்மை ஆகியவை இன்றைய அரசியலுக்கு மிகச் சிறந்த வழிகாட்டிகள். அரசியல் என்ற வீட்டைச் சுத்தம் செய்ய வேண்டுமென்றால், இளைஞர்கள் அதனைப் பற்றிய விழிப்பு உணர்வைப் பெற வேண்டும். அறம் சார்ந்த, நேர்மையான, பொறுப்பு உணர்வு மிக்க தலைமுறையாக இளைஞர்கள் அரசியலிலும், சமூகப் பணிகளிலும் ஈடுபடும்போது மட்டுமே இந்தச் சாக்கடை மீண்டும் பரிசுத்தமான நதியாக மாறும்.

## சமரசம் இதழுக்குப் படைப்புகள் அனுப்புவோர் கவனத்திற்கு..!

- ★ சமரசம் இதழுக்கு வாசகர் கடிதம், கவிதை, சிறுகதை, கட்டுரை அனுப்புவோர் samarasam .article@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ, சமரசம் அலுவலக முகவரிக்கோ அனுப்ப வேண்டும்.
- ★ உங்கள் முழு முகவரி, அலைப்பேசி எண்ணை அவசியம் குறிப்பிட வேண்டும்.
- ★ உங்கள் படைப்புகளை எங்களுக்கு அனுப்பிய மூன்று மாதத்திற்குள் சமரசத்தில் பிரசுரமாகவில்லை எனில் அந்தப் படைப்பை வேறு தளங்களில் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**- பொறுப்பாசிரியர்**


**ஒரு வாட்ஸ்அப் மெஸேஜ் போதும்!**

- இலவசமாய் இஸ்லாமிய நூல்களைத் தொடர்ந்து வாசிக்கலாம்.
- இதர மத அன்பர்களின் இஸ்லாம் குறித்த தேடலுக்கான தளம்
- இது ஓர் அஞ்சல் வழி நூலகம்

உங்களின் முழு முகவரியையும், விருப்பத்தையும் 89252 16126 என்ற எண்ணிற்கு வாட்ஸ் அப் மெஸேஜ் அனுப்புங்கள். நூல்கள் வீடு தேடி வரும்.

**இஸ்லாமிக் அகாடமி**
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 12.
மின்னஞ்சல் : postallibrary@gmail.com

அல்லாஹ்வின் விருந்தாளிகளின் சேவையில் 31வது வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

## இன்ஷா அல்லாஹ்

## 2027 ஹஜ் புக்கிங் நடைபெறுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் 2026லிருந்து 2027 ரமலான் வரை ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்.

## உம்ரா குரூப்:

ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா குழு புறப்படுகிறது. உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

TRUST WORTHY

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**
B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

**தொடர்பு கொள்வீர்**
சென்னை 044-28594441 / 2 / 3
95516 622 31
91 98410 786 36

● அப்துல் சத்தார்

# அமெரிக்க மண்ணில் ஈரான் விளையாட்டு வீரர்கள்

**2026 FIFA கால்பந்து உலகக் கோப்பைத் தொடர் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில் ஈரான், நியூசிலாந்து அணிகள் மோதிய போட்டி பரபரப்பான திருப்பங்களுடன் நடந்து முடிந்தது.அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையே ஒரு பூர்வாங்க அமைதி ஒப்பந்தம் அறிவிக்கப்பட்ட 24 மணி நேரத்திற்கும் குறைவான நேரத்தில் இந்த விளையாட்டு நடைபெற்றது.**



லாஸ் ஏஞ்சல்ஸ் மைதானத்தில் நடைபெற்ற குரூப் G பிரிவு போட்டியில் ஈரான், நியூசிலாந்து அணிகள் மோதின. சர்வதேச தரவரிசைப் பட்டியலில் 20ஆவது இடத்தில் உள்ள ஈரான், 85ஆவது இடத்தில் உள்ள நியூஸிலாந்தை எதிர் கொண்டது. அமெரிக்காவுக்கும் ஈரானுக்குமான பகை ஒருபுறம் இருந்தபோதும் அமெரிக்கா ஈரானின் கால்பந்து அணியினர் 26 பேருக்கு மட்டுமே அமெரிக்க நுழைவு விசா வழங்கியுள்ளது.

ஈரானின் வீரர்கள், அவர்களின் பயிற்சியாளர்கள் யாரும் ஈரானிய இஸ்லாம் புரட்சிப் படையுடன் எந்தத் தொடர்பும் அற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற முன்னறிவித்தலுடன் கடுமையான நிபந்தனைகளுடன் நுழைவு விசா வழங்கப் பட்டது. அமெரிக்காவில் இடம் பெறும் ஒவ்வொரு போட்டியின் பின்னர் அவர்கள் மெக்சிகோவுக்குச் செல்ல வேண்டும் என்பது இன்னொரு நிபந்தனையாகும். ஈரான் வீரர்கள் யாரும் அமெரிக்காவைச் சுற்றிப்பார்க்க அனுமதி கிடையாது.

நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் மிகவும் உற்சாகமாக அவர்கள் விளையாடு வதைப் பார்க்க முடிந்தது. ஈரானின் ஊடக படப்பிடிப்பாளர்கள், உடன் வந்த வீரர் களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. போட்டி தொடங்குவதற்கு முன் ஈரானின் தேசிய கீதம் இசைக்கப்பட்டபோது சில ரசிகர்கள் ஆதரவு தெரிவித்தாலும், மற்றொரு பகுதி பார்வையாளர்கள் எதிர்ப்புக் குரல்களையும் எழுப்பியதாகக் கூறப்படுகிறது.

ஈரான் தரப்பில் ராமின் ரேசியன் தனது முதலாவது கோலைப் போட்டவுடன் மைதானத்தில் அல்லாஹ்வுக்கு நன்றி என்று சொல்லி நிலத்தில் மண்டியிட்டு பிரார்த்தனை செய்தார். அமெரிக்க மண்ணில் உள்ள ஒரு மைதானத்தில் விளை யாடுவது பற்றி எந்த நினைப்புமின்றி தனது இறை நம்பிக்கையை அவர் கைவிட வில்லை. ஈரான் வீரர்கள் அமெரிக்க மண்ணில் எந்தச் சலனமும் இன்றி விளையாடியது வியப் படைய வைத்தது.



ஈரான் - அமெரிக்கா இடையேயான போர் நீண்ட இழுபறிக்குப் பின் முடிவுக்கு வரும் தருவாயில் அமெரிக்காவில் ஈரான் அணி ஆடிய

**ஈரான் தரப்பில் ராமின் ரேசியன் தனது முதலாவது கோலைப் போட்டவுடன் மைதானத்தில் அல்லாஹ்வுக்கு நன்றி என்று சொல்லி நிலத்தில் மண்டியிட்டு பிரார்த்தனை செய்தார்.**



இந்த ஆட்டம் சற்று பதற்றத்துடனேயே பார்க்கப்பட்டது.

ஈரானிய வம்சாவளியினர் அதிகம் வாழும் பகுதி லாஸ் ஏஞ்சலஸ். இதனால் மைதானத்திற்கு வந்திருந்த ஈரான் அணி ரசிகர்களுடன் ஏனையோர் பிரச்னை செய்யக் கூடும் என அச்சம் நிலவியது.

மைதானத்திற்கு வெளியே சுமார் 500 பேர் வரையிலான ஈரான் எதிர்ப்பாளர்கள் திரண்டு ஈரான் அரசுக்கு எதிரான பேனர்களை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஈரான் அணியினர் தங்கியுள்ள ஹோட்டல், அவர்கள் பயிற்சி பெறும் லாஸ் ஏஞ்சல்ஸ் மைதானத்தைச் சுற்றி அமெரிக்க போலீசார், பாதுகாப்புப் படையினர் அதிரடியாகக் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு வளையம் உருவாக்கப்பட்டுள்ளது. எனினும் உளவியல் ரீதியாக வீரர்கள் எவ்வித பாதிப்பும் அடையவில்லை என்பதைத் தான் ஈரான் வீரர்களின் ஆட்டம் வெளிப்படுத்துகிறது. ஏனென்றால் அவர்கள் உண்மையான போர்களை நேரில் பார்த்தவர்கள்.


# HIJAZ
## LEATHERS PVT. LTD.,

Tanners & Exporters of
Finished Leathers & Fashion Gloves

**HEAD OFFICE :**
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

**TANNERY :**
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

**GLOVE FACTORY :**
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com

# கரும்பன் கோகுல்

- S. நஸ்ரத் ரோஸி

வழக்கமாக ஞாயிறுகளில் கடற்கரையைக் காணாவிட்டால் தெய்வக் குத்தமாகிவிடும் அவர்களுக்கு! கடந்த வாரம் சரியான மழை, ராணியும் அவள் கணவர் அன்புவும் தலைக்குக் கவசத்தை மாட்டிக்கொண்டு இரு சக்கர வாகனத்தில் ஏறி அமர்ந்து வீட்டிலிருந்து புறப்பட்டு கடற்கரையை அடைய பாதி தூரம் வந்தாகிவிட்டது, இருட்டிக்கொண்டிருந்த மேகம் பொளேரென பிளந்தார் போல ஒரு பேய் மழை. வண்டியிலேயே தொப்புத் தொப்பாக நனைந்துவிட்டு இனி எங்கு கடற்கரைக்குப் போக என மீண்டும் வண்டியைத் திருப்பி வீட்டிற்கே போய் சேர்ந்து விட்டனர்.

மீண்டும் ஞாயிறு வர இன்று காத்திருந்து, கருமேகம் சூழ்ந்திருந்தாலும் சரி, கொடுங்காற்று வீசிக்கொண்டிருந்தாலும் சரி முடிந்தவரை முயற்சிப்போம் எனக்கூறி அன்புவைக் கட்டாயப்படுத்தி கடற்கரை வரை கடத்தி வந்துவிட்டாள் ராணி. வழக்கமாக வாகனம் நிறுத்தும் இடத்தில் வண்டியை நிறுத்திவிட்டு தலையில் மாட்டியிருந்த கவசத்தைக் கழற்றி வண்டியின் மீதே வைத்துவிட்டு அப்படியே கடல் மணலில் இறங்காமல் மத்தியில் போடப்பட்ட சாலையில் நின்று கொண்டிருந்தார்கள் இருவரும்.

மெரினா கடற்கரை என்பது சென்னைவாசிகளுக்கு பொழுதுபோக்கு மாத்திரமல்ல அது வருமானம் தேடும் திறந்தவெளி நிறுவனமும் கூட! ஒரு காலத்தில் தேங்கா மாங்கா பட்டாணி சுண்டல், கை முறுக்கு, கரும்புச்சாறு, சோளத்தட்டை, மாங்கா பத்தை, பஞ்சுமிட்டாய், குச்சி ஐஸ் விற்றது போக இன்று கடற்கரையில் இல்லாத ஃபாஸ்ட் ஃபுட் ஸ்டால்களே இல்லை எனுமளவிற்கு பிரியாணி, பிரைடு ரைஸ், தந்தூரி, மோமோஸு என அங்கே எல்லாமே கிடைக்கிறது.

தமிழ்நாடு அரசு சார்பாக ஒரு ஃபுட் ட்ரக் நிறுத்தி வைக்கப்பட்டு அதில் பொதுமக்களுக்கு மீன் கட்லட் முதல் லாப்ஸ்டர் ஃபிரை வரை எல்லாவிதமான கடல் உணவுகளும் வறுத்தும், பொறித்தும், சூப்பாகவும், கட்லட்டாகவும் அதில் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கும். அந்தப் பக்கம் சும்மா போனால் கூட எதையாவது வாங்கி தின்னு என மனம் போட்டு நம்மை சாத்தித் தள்ளும். ஆனால் ராணிக்கு அப்படி வெளியில் எதையும் வாங்கித் தின்னும் பழக்கம் இல்லை. அதிலும் அசைவ உணவுகள் என்றால் ஓவராக OCD பார்ப்பாள்.

இன்று ஏதோ அவளுக்குக் கொறிக்க வேண்டுமென்று தோன்ற வேர்க்கடலை விற்றுவந்த ஆயாவிடம் பத்து ரூபாய்க்கு ஓர் உரிப்படி அவித்த வேர்க்கடலை வாங்கி இருவரும் கொறித்துக் கொண்டார்கள், கடற்கரைக் காற்றுக்கு இத மாகவும் பல்லில் போட்டு மெல்லுவதற்கு பதமாகவும் இருந்தது அந்த

அவித்த வேர்க்கடலை. கடலைத் தின்றால் தாகமெடுக்குமே? எடுத்தது. கடல் நீரையா குடிக்க முடியும்?

கருமேகம் திரண்டாலும் என்ன கனமழை பொழிந்தாலும் என்னன்னு மழைக்கோட்டை எடுத்து மாட்டிக்கிட்டு கடற்கரைக்கு வந்தே தீருவேன்னு வந்தியே, கைப்பட எடுத்துவரும் தண்ணீர் பாட்டிலை ஏன் மறந்த? என்பது போல அன்பு அவளை முறைத்தான். சரி இருங்க நமக்கு ஒரு கரும்புச்சாறு கடை கிடைக்காமலா போயிடும் என ராணி தன் தாகம் தணிக்க யாரும் கரும்புச்சாறு கடை போட்டிருக்க மாட்டாங்களா? என பார்வையால் துளாவிக் கொண்டே இருந்தாள்.

அவர்கள் நின்றிருந்த இடத்தில் கடை ஒன்றும் காணாத நிலையில் இருவரும் மீண்டும் வண்டியைக் கிளப்பிக்கொண்டு தெற்குப் பக்கமாக உருட்டிக்கொண்டே போக, இறுதியாக கடற்கரையின் கலங்கரை விளக்கத்தைத் தாண்டி குறுக்காக வரும் லூப் சாலையை அடைந்து நொச்சிக்குப்பம் பகுதிக்குள் நுழைந்தனர்.

மெரினாவில் இருக்கும் கூட்டத்தைக் காட்டிலும் இந்த லூப் சாலையில் வரவர கூட்டம் அதிகரித்துக் கொண்டே செல்கிறதே என இருவரும் காதுகளுக்குள் கசகசத்துக் கொள்ள சாலையோர மீன்கடைகளை மொய்த்துக்கொண்டு சிலரும், அரசால் புதிதாக கட்டித்தரப்பட்ட மொத்த மீன் சந்தை வளாகத்தில் நீந்திக்கொண்டிருந்த பலருமாக லூப் ரோடு களைகட்டியது. மீன் உணவுகளைப் பிரியமாகச் சாப்பிடும் யாருக்கும் மீன் வாடை நாற்றமாக இருக்காது வாசனையாக இருக்கும், ராணிக்கும் அப்படித்தான். அவளுக்கு கருவாடும் கூட நறுமணப்பொருள் தான்.

போதாக்குறைக்கு அங்கே இப்போது பத்து, பதினைந்து மீன் உணவுக் கடைகள் வேறு முளைத்து விட சுந்தரி அக்கா சாப்பாட்டுக்கடை, உங்கள் மீனவன் சாப்பாட்டுக்கடை, அழகிய மாதா மீன் உணவுக் கடை, கடல் உணவகம் சாப்பாட்டுக்கடை, தென்னவன் மீன் உணவகம், மெரினா கடல் மீன் உணவகம் என விதவிதமான பெயர்களில் சாலையோர சாப்பாட்டுக் கடைகள் உருவாகி இன்று சென்னையின் புறநகர்ப் பகுதியில் இருந்தெல்லாம் இங்கே இளசுகள் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது.

எதிர்தரப்பில் ஒரு தள்ளு வண்டிக்கடை. சோளத்தட்டை, மாங்காபத்தை எல்லாம் வைத்துக் கொண்டு ஒரு சிறுவன் சோளக்கருது ஒன்றை நெருப்பில் வாட்டிக் கொண்டு இருந்தான். ஒரு கையால் அடுப்பின் சொடுக்கானைச் சுழற்றிக் கொண்டே மறு கையால் அவன் சோளத்தைப் பிடித்திருந்த லாவகமும் கடற்கரைக் காற்றில் அவன் சுழற்றிய கரி அடுப்பில் பறந்த தீப்பொறிகளும் அதில் மங்கலாய் அவன் முகம் தெரிய காற்றடிக்கும் திசையில் பறந்த அவனது நெற்றிமுடி அசைவுகளும் அவனை ஒரு ஹீரோ போல அவளுக்குக் காட்சிப்படுத்தியது.

உண்மையில் இப்போது ராணிக்கு அவன் ஹீரோ தான், சோளத்தட்டை கடைக்கு அருகிலேயே அவனது கரும்புச்சாறு கடையும் இருந்தது. ஒரு வழியாக ராணி தன் தாகம் தணிக்க ஒரு கடையைக் கண்டுபிடித்து விட்டாள். வேக வேகமாக நடந்து கரும்புச்சாறு கடையை நெருங்கிவிட்டாள். அந்தக் கடையில் நின்றிருந்த நடுத்தர வயதுக்காரர், இச்சிறுவனிடம் கடையை பார்த்துக்கொள்ள கூறிவிட்டு அங்கிருந்து தெற்கு நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

கடையில் நின்று வியாபாரம் பார்ப்பவர் தானே அதற்கு உரிமையாளர். ஆகவே ராணி அவனை நோக்கி, ‘ஓனர் ரெண்டு கரும்பு ஜூஸ் கொடுங்க’ என்றாள். சிறுவன் தன்னை அவள் ஓனர் என அழைத்ததை கவனிக்காதது போல இரண்டு கண்ணாடி டம்ளர்களை எடுத்து தண்ணீரில் அலசி விட்டு பிழிந்து வைத்திருந்த சாறை ஜாடியில் இருந்து தூக்கி டம்ளருக்கு மாற்றினான்.

கரும்புச்சாறின் இனிமையா இல்லை அதில் போடப்பட்டிருந்த ஐஸின் குளுமையா தெரியவில்லை வேர்க்கடலை தின்று விக்கித்து நின்ற ராணிக்குப் புத்துயிர் கொடுத்தது



போல இருந்தது, கடகடவென குடித்து விட்டு இறுதியாக வந்த அந்த குட்டியான ஐஸ் கட்டியைக் கூட துப்பி விடாமல் அப்படியே வாயில் சற்று நேரம் வைத்துக் கொண்டாள். ஐஸ் முழுவதுமாகக் கரையும் வரை காத்திருந்துவிட்டு இறுதியாக டம்ளரை மேசையில் வைத்தவள், 'எவ்வளவு ஓனர்' என்றாள். சிறுவன் 'முப்பது' என்றான்.

அன்பு தனது பேண்ட் பாக்கட்டில் இருந்து ஐம்பதை எடுத்துக் கொடுத்து முப்பதை வாங்கும் முன்னர் அவனது அலைப்பேசி ஒலிக்க மிச்சத்தை வாங்கிக் கொண்டே அவன் அலைப்பேசியைத் தொட்டுப் பேச ஆரம்பித்து விட்டான், பேசிக் கொண்டே அவ்விடத்தை விட்டு அகன்று வண்டி நிறுத்தியிருந்த இடத்திற்கு போய் அங்கே வண்டி மீது அமர்ந்து கொண்டான்.

இப்போது ராணிக்கு அந்த சுட்ட சோளத்தையும் வாங்கி ருசித்துவிட வேண்டும் என வாய் ஊற, எதிர் தரப்பில் அமர்ந்திருந்த கணவனுக்கு கையைத் தூக்கி சிக்னல் காட்டி, 'சோளம் வாங்கிக்கவா' என்பது போல சமிக்ஞை செய்ய, தலையில் அடித்துக் கொண்ட அன்பு, 'வாங்கித்தொலை எனக்கு வேண்டாம்' என மறு சிக்னல் கொடுத்தான். மீண்டும் சிறுவனிடம் திரும்பிய ராணி, 'ஓனர் ஒரு சோளம் கொடுங்க, எவ்வளவு' என்றதும், சிறுவன் சிரித்துக்கொண்டே 'ஆன்ட்டி நான் ஓனர் இல்ல, எங்கப்பா தான்' என்றவன், 'சோளம் அவிச்சது பத்து ரூபா, சுட்டுக்கொடுத்தால் இருபது ரூபா' என்றான். 'சரி எனக்கு ஒன்னு சுட்டுக்கொடுங்க ஓனர்' என்றாள் மீண்டும் சிரித்தபடியே.

'ஓனர் உங்க பேர் என்ன? என்ன படிக்கிறிங்க?'

'கோகுல், ஒன்பதாவது படிக்கிறேன், நான் ஓனரில்லை எங்கப்பா தான் ஓனர்' என்றான் மீண்டும் திருத்தமாக.

'சரி விடுங்க சார், உங்கப்பாவுக்கு அப்புறம் நீங்க தான ஓனர், இப்ப இருந்தே சொல்லி பழகிக்கிறேன்'

'இல்லை, எனக்கு ஒரு அக்கா, ஒரு தங்கச்சி இருக்காங்க, நான் மட்டும் ஓனராக முடியாது'

'இருந்தாலும் ஆம்பளப்பிள்ள தான சொத்துக்கு வாரிசு ஓனர்' என்றவள் கையில் நெருப்பில் வாட்டிய சோளத்தட்டையை கொடுத்தான் கோகுல். பத்திரமாக வாங்கிக்கொண்ட ராணி சோளத்தைக் கடிப்பதற்கு முன் கொஞ்சம் ஊதினாள், அப்போதும் அது சூடாகவே இருந்தது. கடற்கரைக் காற்றில் ஆறிவிடும். ஆனாலும் அவளுக்கு அவசரம் லேசாக ஒரு கடி கடித்துவிட்டு அதனை சூடு பொறுக்க மெல்ல முடியாமல் வாயில் வைத்தே ஊதிக்கொண்டிருந்த ராணியைப் பார்த்துச் சிரித்தான் கோகுல்.

'என்ன சார் சிரிக்கிறீங்க, அதோ அங்க பாருங்க அவர் தான் எங்க ஓனர். மனுசன் போன் பேசிட்டு வர்ற வரைக்கும் தான் எனக்கு டைம், அதுக்குள்ள நான் சாப்பிட்டு முடிக்கலைன்னா எனக்கு திட்டு விழும், நான் என்ன உங்கள மாதிரி ஓனரா?' என்றாள் பரிதாபமாக.

'அதோ அங்க துலுக்கானத்தம்மன் கோவில் தெரியிதா? அதுக்கு பக்கத்தால தான் எங்கம்மா பூக்கடை போட்டிருக்காங்க, அங்க இந்நேரத்துக்கு எங்க அக்கா கோகிலா வந்து கடையைப் பார்க்க ஆரம்பிச்சிருக்கும், எங்கம்மாவுக்கு உடம்புக்குச் சரியில்லாம ஆகிட்டதால கடைப் பக்கமே வரக்கூடாதுன்னு சொல்லியிருந்த எங்கப் பாவே இப்ப அக்காவை வரச்சொல்லி கடையைப் பார்த்துக்க சொல்லியிருக்கார். எங்க அக்கா தினமும் எழுந்து எங்களுக்கு சமைச்சி வச்சிட்டு, காலேஜுக்கு போயிட்டு வந்து, திரும்பவும் இங்க கடைக்கு வந்துட்டு திரும்பவும் வீட்டுக்குப் போய் எங்களுக்கு டிபன் செய்யும்.

அதே மாதிரி அந்தப் பழைய குடியிருப்பில் தான் எங்க வீடு, எங்க ஆயா அங்க கீழ பெட்டிக்கடை வச்சிருக்கு, தினமும் என் தங்கச்சி கோமளா தான் மாடியில் இருந்து ஆயாவுக்குச் சரக்கு எடுத்துட்டு வந்து தரும், ராத்திரிக்கு சரக்கைத் தூக்கிட்டு இரண்டாவது மாடிக்கு ஏறி வீட்டுக்கு வரும், அவங்க உழைக்கிறதை விட நான் இங்க செய்யிற வேலை ரொம்ப கம்மி கரும்புச் சக்கையை எடுத்துட்டு போயி மெயின் ஜங்க் பாக்ஸ்ல போட்டுட்டு வருவேன், அப்பாவுக்கு துணைக்குக் கிளாஸ் கழுவ கடையில் நிற்பேன் அவ்வளவு தான் இங்க என் வேலை ஆன்ட்டி, இப்படி எல்லாரும் உழைக்கும் போது நான் மட்டும் எப்படி வாரிசாக முடியும்' என்றான் தன்னடக்கத்துடன்.

'ஓ...! சார், நீங்க பெரியாளு தான் போங்க! அம்மா அப்பா சொத்தெல்லாம் எனக்குத் தான்னு சொல்லி பெண் பிள்ளைகளை துரத்தி விடும் சகோதரர்கள் வாழும் நாட்டில் ஞானி மாதிரி பேசுறீங்க சார், உங்களை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு' என்றாள் கோகுலுடைய தலையைத் தட்டிக்கொடுத்து.

'ஆண்கள் தான் பெண்களுக்குக் கொடுக்க கடமைப்பட்டவங்க, பெண்களிடம் இருந்து எதையும் பிடுங்கும் ஆண்கள் தங்களை ஆண் என சொல்லிக் கொள்ளவே தகுதி யற்றவர்கள். நான்லாம் நல்லா சம்பாதிச்சு எங்க அக்காவுக்கும் தங்கச்சிக்கும் நிறையக் கொடுப்பேன், எங்கம்மாவுக்கு ஏற்பட்ட நிலை எங்க அக்கா, தங்கச்சிக்கு வர விடமாட்டேன் ஆன்ட்டி.

எங்கம்மாவும் சொத்துப் பிரச்னையால சகோதரர்களால் துரோகம் செய்யப்பட்டவங்க தான், அதுக்காக எங்கப்பா அவங்களைக் கோவிச்சிக்கல, ஆனா எங்கப்பா வீட்டு சொந்தக்காரங்க ஒரு மாதிரியா பேச ஆரம்பிச்சவுடனே கூட்டுக்குடும்பமா இருந்த எங்களை எங்கப்பா இப்படித் தனியா கூட்டிட்டு வந்துட்டாரு, கேவலம் சொத்துக்காக குடும்பத்தை விட்டு நம்மள அந்நியப்படுத்திட்டாங்களேன்னு கவலைப்பட்டு கவலைப்பட்டு எங்கம்மாவும் முடியாம ஆகிட்டாங்க, அதனால் நானும் எங்க அக்கா, தங்கச்சி மூன்று பேரும் எப்போதுமே சொத்துக்காக சண்டை போடக்கூடாதுன்னு சத்தியம் பண்ணியிருக்கோம் ஆன்ட்டி' என்றவனை கண்கலங்கி பார்த்துக் கொண்டிருந்தாள் ராணி.

இப்போது சினிமா காட்சியில் காட்டப் படுவதைப் போல பின்னணியில் தீப்பொறி பறக்க அனலில் இருந்து எழுந்து வரும் அக்கினிக்குஞ்சு போலத் தெரிந்தான் கோகுல், இருந்தாலும் சற்றே சுதாரித்தவளாக பேச்சை வேறு திசையில் திருப்பினாள்.

'அப்படியாங்க சார், அருமையான குடும்பம் சார் உங்க குடும்பம், எப்படி எல்லாரும் உழைக்கிறீங்க, அது சரி அதென்ன உங்கப்பா எல்லாருக்கும் 'கோ' எழுத்திலே பேரு வச்சிருக்காரே? அதெப்படி?' என்றவள் அந்த மெல்லிய இருட்டில் கோகுலுடைய கடைப்பெயரை ஒருமுறை குனிந்து பார்த்தாள், அதில் 'கோட்டைசாமி துணை' என்றிருந்தது கடைக்குப் பெயரில்லை.

ராணியின் கேள்விக்குப் பதில் சொல்ல தயாரான கோகுல், 'எங்க குலசாமி பேரு கோட்டைச்சாமி, எங்க தாத்தா பேரு கோபாலன், ஆயா பேரு கோவிந்தம்மாள் ரெண்டு பேருக்கும் எதேச்சையா பேரு கோ எழுத்தில் அமைஞ்சிட்டதால, அப்பாவுக்கு கோடீஸ்வரன்னு பேரு வச்சிட்டாங்களாம், எங்கப்பாவும் முன்ன மீன் பிடிச்சிட்டிருந்தப்போ கடைக்கு மீன் வாங்க வந்த அம்மாவோட பேரு கோமதி என தெரிஞ்சவுடன் அந்தப் பேருக்காகவே காதல் பண்ணி கல்யாணம் கட்டிக்கிட்டாராம், இப்ப நாங்க மூணு பேர் பிறக்குறதுக்கு முன்னவே எங்களுக்கு கோ எழுத்தில் பேரு வைக்க முடிவு பண்ணிட்டாங்களாம், வீட்டாண்ட எங்களை நக்கலடிக்க எல்லாரும் 'கோக்கோ கோக்கோ' என்று சொல்லிட்டிருப்பாங்க' என்றவனை உற்று பார்த்துக்கொண்டே இருந்தாள் ராணி.

'அதுசரி! எல்லா கோ பேரையும் நீங்களே

வச்சிட்டா உங்க பசங்களுக்கு என்ன பேர் தான் வைப்பீங்க ஓனர் சார்' என்ற ராணியிடம்

'பேருக்கா பஞ்சம் ஆன்ட்டி, இருக்கவே இருக்கு கோப்பெருஞ்சோழன், கோப்பெருந்தேவி, கோமான், கோபரகேசரி இப்படி எதையாவது தேடி வச்சிக்குவோம், இந்து பேரு இல்லைன்னா கிறிஸ்டின் பேரு, அதுவும் இல்லைன்னா முஸ்லிம் பேரு, நமக்குத் தேவை கோ எழுத்தில் ஒரு பேரு அவ்வளதானே ஆன்ட்டி' இப்போது கோகுல் உயர்ந்த மனிதனைப் போல ராணிக்குப் பட்டான்.

'ஆமா நீங்க நல்ல நல்ல தத்துவமா பேசுறீங்களே இதெல்லாம் எங்கிருந்து கத்துக்கிட்டீங்க..?' என குதூகலமாக ராணி சொல்லிக் கொண்டிருக்கும்போதே திடீரென முஸ்லிம்களின் பள்ளிவாசலில் ஒலிக்கும் பாங்கோசை கேட்டது. இது எங்கிருந்து கேட்கிறது என அங்குமிங்கும் திரும்பிப் பார்த்துவிட்டு ஒன்றும் புலப்படாதவளாய் ராணி, கோகுலிடமே கேட்டுவிட்டாள், 'இங்க எதாவது மசூதி இருக்குதா என்ன?' என்று.

'அதுவா இப்படியே நேரா போங்க ஒரு மேரி மாதா கோபுரம் வரும், அதையும் தாண்டி போங்க எங்க நொச்சிக்குப்பம் பழைய குடியிருப்பு வரும், அதில் பத்தாம் நம்பர் பில்டிங்கில் ஒரு கீழ் வீட்டில் ஒரு குட்டி பள்ளிவாசல் இருக்கும், அங்க எல்லா வெள்ளிக்கிழமையும் பிரேயருக்கு முன்ன பிரசங்கம் பண்ணுவாங்க, நான் பள்ளிக்கூடத்தில் இருந்து மதிய உணவு சாப்பிட வருவேன், அப்ப சாப்பிட்டுக்கிட்டே அவங்க சொல்றதைக் காதில் வாங்குவேன், வாழ்க்கையில் எப்படிலாம் நல்லபடியா அடுத்தவங்களுக்கு நன்மை செஞ்சி வாழணும்னு அவங்க சொல்றதைக் கேட்டுக்குவேன், இப்ப தொழுகை முடிச்சிட்டு கும்பலா இங்க தான் ஜூஸ் குடிக்க வருவாங்க ஒருநாள் முழுக்க நிக்கிறதுக்கு கூலியா இந்த அரைமணி நேரம் பாய்ங்க தரும் வியாபாரம் நல்ல லாபத்தை தந்திடும் ஆன்ட்டி' என்ற கோகுலை வியப்புடன் பார்த்தவள்,

இப்ப தொழுகை முடிச்சிட்டு கும்பலா இங்க தான் ஜூஸ் குடிக்க வருவாங்க ஒருநாள் முழுக்க நிக்கிறதுக்கு கூலியா இந்த அரைமணி நேரம் பாய்ங்க தரும் வியாபாரம் நல்ல லாபத்தை தந்திடும் ஆன்ட்டி'

என்ன இவனுக்கு ஒரு 14 வயசு இருக்குமா? எவ்வளவு பக்குவமாக பேசுறான். அது சரி இங்க கருமாரியம்மன் கோயில் இருக்கு, துலுக்கானத்தம்மன் கோயில் இருக்கு, அப்புறம் இன்னொரு அம்மன் கோயில் கூட இருக்கு, ஓர் அழகிய மாதா கோயிலும் இன்னொரு மாதா கோயிலும் இருக்கு, ஆனால் இங்க பள்ளிவாசல் ஒன்னு இருக்குறதே இப்பத்தான் எனக்குத் தெரிகிறது. நாமும் இந்த சென்னை மாநகரத்திலே நாற்பது ஆண்டா குடியிருக்கோம் இந்த கடற்கரைக்குக் கல்யாணம் ஆனதிலிருந்து வாரா வாரம் வந்துட்டிருக்கோம். ஆன பள்ளிவாசல் இருப்பது எப்படி தெரியாமப் போச்சு? என்ற யோசனையில் இருந்தவளை ஒரு கை வந்து தட்டிக் கொண்டே இருக்க திரும்பிப் பார்த்தாள் ஒரு பூக்கார அக்கா.

'அக்கா, என் தலையை பாரு' என்றதும், பாப்கட் செய்திருந்த ராணியின் முடியைப் பார்த்த பூக்கார அக்கா சிரித்துக் கொண்டே சரிம்மா சரிம்மா என்றபடி நகர்ந்துவிட்டார். மீண்டும் தோளில் தட்டப்பட திரும்பிப் பார்த்தபோது அங்கே இக்னிஷியனை முறுக்கி விட்டுக் கொண்டு வண்டியுடன் அன்பு நின்றிருக்க, தின்று முடித்த சோளத்தட்டைக்கு அவனிடமிருந்து இருபது ரூபாயை வாங்கி கோகுலிடம் கொடுத்த ராணி, 'அடுத்த வாரமும் வருவேன், இனிமே எங்களுக்கு நீ தான் குடும்ப கரும்புச்சாறு கடை ஓகே' என இடது கை கட்டைவிரலை உயர்த்திக் காட்ட புன்முறுவலுடன் நின்றிருந்தான் இனிமையாகப் பேசி இதயத்தைக் கொள்ளை அடித்த கரும்பன் கோகுல்.

# சமரசம் புதிர் போட்டி 13

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை 2026 ஜூலை 15 ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, 73050 40386 என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, samarasam.article@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி, G Pay எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட வேண்டும்.

1. ‘நீங்கள் பார்க்கவில்லையா, என்ன? அல்லாஹ் பூமியிலுள்ள அனைத்தையும் உங்களுக்காக வசப்படுத்தி வைத்துள்ளான்; மேலும், கப்பலை ஒரு நியதிக்கு உட்படுத்தி வைத்திருப்பதும் அவன்தான். அது அவனுடைய கட்டளைப்படி கடலில் சென்று கொண்டிருக்கின்றது. மேலும், அவனே வானத்தைத் தன் பிடியில் வைத்திருக்கின்றான், தன் உத்தரவின்றி அது பூமியின் மீது விழுந்து விடாமல் இருப்பதற்காக! திண்ணமாக, அல்லாஹ் மனிதர்கள் மீது மிகவும் பரிவு கொண்டவனாகவும் பெரும் கருணையுள்ளவனாகவும் இருக்கின்றான்’ இந்த வசனம் இடம்பெற்றுள்ள திருக்குர்ஆன் அத்தியாயம்

   அ) அல் அன்ஆம் ஆ) அல்ஹஜ்

2. ‘ஒருவருக்கு (அவர் பாவியாவதற்கு) தன்னுடைய பொருளை வீணாக்குதலும் அல்லது எவருடைய வாழ்வாதாரம் தன்னுடைய பொறுப்பில் இருக்கிறதோ அவற்றை அழித்து விடுதலுமே போதுமானதாகும்’ இந்த நபிமொழியை அறிவித்தவர்

   அ) இப்னு அப்பாஸ்(ரலி)
   ஆ) அப்துல்லாஹ் பின் அம்ர்(ரலி)

3. நெதர்லாந்திலிருந்த ஆனைமங்கலம் செப்பேட்டை நரேந்திர மோடியிடம் ஒப்படைத்தவர்கள்

   அ) லைடன் பல்கலை அதிகாரிகள்
   ஆ) யுனெஸ்கோ

4. ஆண்களில் நபி(ஸல்) அவர்களுக்கு விருப்பமானவர்

   அ) உமர்(ரலி) ஆ) அபூபக்கர்(ரலி)

5. அல்காரிதத்தை முதன்முதலில் கண்டுபிடித்த கணித அறிவியலின் தந்தை

   அ) கவாரிஸ்மி ஆ) இப்னு ஹைஹத்தம்

6. கோடிங் ஆராய்ச்சித் திறனைப் பயன்படுத்தி OSM மதிப்பெண் முறையில் ஏற்பட்ட குளறுபடிகளை வெளிப்படுத்தியவர்

   அ) சர்தக் சித்தாந்த் ஆ) வேதாந்த் ஸ்ரீவஸ்தவா

7. வேலையில்லா இளைஞர்களை கரப்பான் பூச்சியுடன் ஒப்பிட்டுப் பேசி மிகப்பெரும் விமர்சனத்திற்கு உள்ளான நீதிபதி

   அ) சூர்யகாந்த் ஆ) சந்திரசேகர்

8. டெல்லி தீ விபத்தின்போது தங்களது மெத்தைகளைக் கொடுத்து 14 உயிர்களைக் காப்பாற்றியவர்

   அ) முஹம்மது ஷாரூக் ஆ) ரியாசுதீன் மன்சூரி

## புதிர் போட்டி பதினொன்றிற்கான விடைகள்

1. (அ) ஸபா 2. (ஆ) ஜாபிர்(ரலி) 3. (ஆ) அல்லாஹ்வை அறிந்தவர்கள் ஒன்று கூடும் இடம் 4. (ஆ) அலீ(ரலி) 5. (அ) 18,727 6. (ஆ) Lexicographer 7. (ஆ) ரம்ஜான் 8. (அ) அபிஜித் தீப்கே 9. (அ) ஜே. சி. டி. பிரபாகர் 10. (ஆ) அண்ணா நூற்றாண்டு நூலகம்

**சரியான விடையை எழுதியவர்கள்:**

1. ஷே.மஹசூக், காரைக்கால் 2. சோழா புகழேந்தி, கரியமாணிக்கம் 3. ஸ்ரீமதி, மஞ்சக்குப்பம் 4. ந.அனிபா, நாமக்கல் 5. ஜைனப் ஜுவைரிய்யா, கிளியனூர் 6. ஜா.ஜுனைதா பேகம், பரங்கிப்பேட்டை 7. H. ஆயிஷா, அரவங்காடு 8. A. கவுஸ்மீரான், பாளையங்கோட்டை 9. P.A. சமீஹா, கடையநல்லூர் 10. சையத் அஹமது சுஹைப், கீழக்கரை 11. M. குர்ஷித் ஃபர்ஹானா, திட்டச்சேரி 12. S.S. ஆயிஷா பானு, கடையநல்லூர் 13. HM. அஜீம், காரைக்கால் 14. G. கிருஷ்ணன், ஆற்காடு.

**பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:**
**ந.அனிபா, நாமக்கல்**



# நினைப்பவனும் மறப்பவனும்

• ஆரூர் புதியவன்

இறைவனை
நினைப்பவன்
நினையாமல் மறப்பவன்
இருவேறு வகையினர்
உண்டு இம்மண்ணிலே

இருவருக்கும்
ஓர் உவமை உண்டு
என்றனர்
இறைத்தூதர்
முஹம்மது(ஸல்)

உவமை இல்லா
ஓரிறையின்
ஒளி ஏந்தி வழிநடத்தி
சுவனம் புக வைக்கும்
அருட்சோதியவர்
உரை பகர்வார்

உள்ளத்தால் ஓர்
இறையை
ஒருபோதும் மறவாதோர்
உயிர்த்திருக்கும்
மனிதருக்கு ஒப்பாவார்

அல்லாது

கள்ள மனம் கொண்டு
கர்த்தனை மறந்தவர்கள்
செத்தோரை ஒத்தோரே
என்று
செய்தி பகர்ந்தார்கள்

இந்த நபிமொழியை
ஒரு ஞானி
எடுத்துரைத்தார்

நபிமொழியை செவியுற்ற
நலம் கெட்ட ஒரு
குறும்பன்
சைத்தான் தன்
மனத்திருக்க
வைத்தான் ஒரு
கேள்விதனை

உயிர் இருந்தும்
பயன் என்ன..?

ஒடுங்கிய ஏழைகளை
ஒரு பயனும் அற்றவரை
சபைகளில் யார் இங்கே
சமமாக நடத்திடுவார்..?

உயிரற்ற பிணமாகி
ஒரு செல்வன் கிடந்தாலும்
அவன் காலடியில்
மாலைகள்
கணக்கின்றிக்
கிடக்கிறதே
சுவரொட்டி
விளம்பரங்கள்
கொண்டாட்டம்
நடக்கிறதே

பிணமாய்க் கிடந்தாலும்
பெரும் பேறு
இதுவன்றோ..?

ஜனத்திரள் சூழ்ந்திருக்க
பிணமாய்க் கிடப்பவன்
உயிர்த்திருக்கும்
ஏழையினும்
உயர்ந்தோனாய்
உள்ளானே..!

இக்கேள்வி எதிர்கொண்ட
ஞானி
எதிர் கேள்வியால்
அடித்தார் ஓர் ஆணி

பிணத்துக்குக் கிட்டும்
பெரு மதிப்பு யாவும்
எத்தனை நாளைக்கு
இம்மண்ணில் நடக்கும்

மரணித்து விட்டவரை
மறுநாளே கொண்டுபோய்
மண்ணறையில்
வைப்பார்
மாற்றாரோ தீ வைப்பார்

உலகில் வாழ்வதற்கு
உயிர்த்திருத்தல் தான்
தகுதி

இலகு பதில்
ஞானி சொல்ல
இவன் மனதில்
குடியிருந்த
குழப்பஇருள் விலகியது

அகமும் அழகாக
விடிந்தது அருளாலே..!

(நபி(ஸல்) அவர்கள்
நவின்றார்கள்:
‘இறைவனை நினைவு
கூர்கிற மனிதன்,
நினைவு கூராத மனிதன்
இருவருக்கும் உதாரணம்
உயிருள்ளவரையும்
மரணித்தவரையும்
போன்றதாகும்’ நூல்:
புகாரி, ஃபத்ஹுல் பாரி)

# விடுதலையே தரும் மாட்சி..!

● ஆரூர் புதியவன்



உருவாக்கிய
ஒரு வாக்கியம்
திருவாக்கிய மாக

கருவாக்கிய
அருள் வாக்கியன்
தரு வாக்கினை
ஏற்போம்

மலராடையும்
குளிர் ஓடையும்
பலர் தேடிடக்
கூடும்

கனலாகிட
களம் ஆடிடும்
மனம் தீமையைச்
சாடும்

சதிராடிடும்
சதியோடிட
மதி யூகிகள்
வேண்டும்

நதியாய்
திகழ் மதியால்
தளபதியாகிட
வேண்டும்

விலையாகிற
கலையால்
நிலை குலைவால்
வரும்
வீழ்ச்சி
தளை நீக்கிடல்
தலையே விடு
தலையே தரு மாட்சி.

● ஜரினா ஜமால்

# அக்கரைப் பச்சை 40

நேற்றே ஃபாத்திமா சொல்லி விட்டாள். ‘மச்சி இன்னைக்கும் நாளைக்கும் நம்ம வீட்டில் பஞ்சாயத்துக் கூட்டம் இருக்கு’

‘அதை இன்னும் நிறுத்தலையா? உங்க அண்ணன் அதை வேறெங்காவது வச்சுக் கோங்கன்னு சொன்னாங்களே?’

‘அது சொன்ன பின்னாடியே சில மாதங்களில் அண்ணன் போய் சேர்ந்துடுச்சு. ஆனா நம்ம வீட்ல பஞ்சாயத்துக் கூட்டம் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கு’

சாலிஹாவுக்கு பஞ்சாயத்துக் கூட்டத்தைப் பார்க்கவும், அங்கு வைக்கப்படும் குற்றச்சாட்டைக் கேட்கவும், அவர்கள் அளிக்கும் தீர்வைக் காணவும் ஆர்வம் மேலிட்டது.

மதியத்திற்கு மேல் ஹாலில் பாய்கள் விரிக்கப்பட்டது. நான்கைந்து சேர்கள் போடப்பட்டது. ஒரு நாற்காலியும், மேஜையும் முன்னால் வைக்கப்பட்டு தண்ணீர் போத்தல்கள் மொத்தமாக முன்னால் வைக்கப்பட்டது. நேரம் செல்லச் செல்ல ஆட்கள் வந்து அமர்ந்தார்கள். ஹால் நிரம்பி விட்டது.

‘சல்மான் இருந்த காலத்தில் வீடு சும்மா கிடக்கிறது என்று கல்யாணங்கள், ஊர் பஞ்சாயத்து போன்ற நல்ல காரியங்கள் நடந்து கொண்டிருந்தது. பட்டாணி வீட்டுக் குடும்பத்தில் ஒரு வழக்கு வந்ததில் கூட்டத்தில் கேட்கக் கூடாத கேள்வியை யாரோ கேட்டதில் அந்தப் பெண் மானம் தாங்க முடியாமல் கயிற்றில் தொங்கி விட்டாள். இந்தச் செய்தி சல்மானுக்கு பெருத்த வேதனையை ஏற்படுத்தியது. இனி வீட்டில் பஞ்சாயத்துக் கூட்டம் வைக்கக் கூடாது என்று தடை செய்தான். அத்தோடு குடும்பம் சென்னைக்குக் குடி பெயர்ந்தது’

‘மச்சி அந்தப் புள்ள ஏன் தற்கொலை பண்ணினா ?

தன் மகள்களைத் திரும்பிப் பார்த்தாள் ‘போய் வேலையைப் பாருங்க..! வாய் பார்த்துக்கிட்டு நிக்காதீங்க!’ துரத்தி விட்டாள். அவர்கள் போன பிறகு சல்மாவிடம் பேச ஆரம்பித்தாள். ‘இவளுங்க முன்னாடி எதுவும் பேச பயமா இருக்கு சாலி மச்சி’

‘அந்தப் புள்ளக்கி மாமி மவன பேசி இருந்துச்சு! கடைசி வக்துல அவ மாமி மவன் வேண்டாம். பெரியம்மா மவனத் தான் கட்டுவேன்னு சொல்லிட்டா. அது பெரிய பிரச்னையாகி குடும்பத்தில் உள்ளவர்கள் கேட்கக் கூடாத வார்த்தையைக் கேட்டுட்டாங்களாம். அவன விட இவனப் புடிச்சிருக்கானு நாகரிகமா கேட்டிருக்கலாம். வேற மாதிரி அசிங்கமா கேட்டு இருக்காங்க. அந்த நல்ல புள்ள தங்களுக்கு கிடைக் கலைன்னு ஆத்திரத்துல அவ அதக் கேட்டு மானம் தாங்காம கயித்துல தொங்கிட்டா.

தற்கொலை எதற்கும் தீர்வு கிடையாது. ஓர் உயிரின் இழப்பு யாராலும் ஈடுகட்ட முடியாத ஒன்று. சேமித்த பொருளாயினும், சம்பாதித்த செல்வமாயினும், பெற்ற நற்பெயர் என்றாலும், உற்ற உறவாய் இருந்தாலும், இழந்த பின்பு திரும்பப்

பெறுவது அரிது. தன்னை மாய்த்துக் கொண்டு தான் தன் வேதனையைக் காட்ட வேண்டும் என்பது முட்டாள்தனமானது.

சின்னக் கனி மாமா வந்து விட்டார். ஊரிலேயே முதலாவதாக ஹஜ் செய்தவர். நீதி நேர்மையான பண்பாளர். குடும்பத்தில் நடக்கும் விஷயங்களை, குழப்பங்களை, சண்டைகளை அவரிடம் வந்து சொல்வார்கள். தீர விசாரித்து அதைப் பொருத்தி விடுவார். ஜட்ஜே தோற்று விடுவார் அப்படி இருக்கும் அவருடைய தீர்ப்பு. வந்தவுடன் அனைவருக்கும் சலாம் கூறினார். நலம் விசாரித்தார். ஒரு நொடி பிரார்த்தனை செய்தார். 'சொல்லுங்க' என்றார்.

'லே வாப்பா! இவன் பொஞ்சாதி தனியா கூப்டான்னு போய்ட்டா(ன்). வூட்டுக்குப் போனாலும் வராதேங்குறா. எனக்கு பேரம் பேத்தியைத் தேடாதா? எம்புள்ளய பாக்கவும் வராதேங்குறா. அவ(ன்) வேலை செய்ற எடத்துல போய் பாருங்குறா. இவ(ன்) ஒன்னும் சொல்ல மாட்டுறான். எம்பூட்டு நாளக்கி தங்கச்சி வீடு தம்பி வீடுன்னு நான் அலைய? ஒரு வேலயும் செய்ய முடியல. கையெல்லாம் நடுங்குது. மெதுவா தூத்து தொடச்சி துவச்சி குளிச்சி இருந்தாலும் ஒரு மடக்கு காபி போட்டுத் தர மருமக வேணாமா? நியாயத்தைச் சொல்லு தங்கமவனே!'

ஓரத்தில் பாவம் போல் நின்றிருந்த மொய்தினைப் பார்த்தார் சின்னக்கனி ஹாஜியார். 'என்னலே வாப்பா? உன் வாப்பா தாய் தகப்பன கண்ணுக்குள்ள வச்சு பார்த்தான். அண்ணனு(ம்) தங்கச்சியும் பாசமலரா மணந்தாங்களே? நீ என்னன்னா பெத்த தாயை விட்டு தனியா போனதுமில்லாம வீட்டுக் குள்ள ஏத்தவும் மாட்டேங் கற ஏ(ன்).'

'அப்படியெல்லாம் இல்ல மாமா! அவளுக்கு எம்மாவை கண்டாலே புடிக்கல. அதனால பிரச்னை வேணான்னு அம்மாவ மாமா வீட்டுல இருக்கச் சொன்னே(ன்)'

'உம்மா பார்த்து உனக்கு முடிச்சாளா? இல்ல நீயே கட்டிக்கிட்டு வந்தியா?'

'உம்மாதான் பாத்து முடிச்சா'

'உன்னப் பார்த்தாலே உம்மா சாடைதான் இருக்கே. சரி! உன்ன வாணாம்னு சொன்னா என்ன செய்வ?'

'என்ன வாணாம்னு சொல்லிடுவாளா? நா அவளுக்கு என்னவெல்லாம் செய்றேன்?' மைதீனுக்கு ரோஷம் வந்து விட்டது. உன்னும்மாவும் உனக்கு என்னவெல்லாம் செஞ்சு தானேலே வளர்த்தா?'

'நமக்கு என்னவெல்லாம் செய்யும் புருஷன் கிடைக்கச் செய்த மாமிக்கு அவ என்னவெல்லாம் செய்ய வேணும்?'

'நம்ம ஊரு மக்க மற்ற ஊர் மக்களுக்கு நல்ல முன்மாதிரியாக இருங்கன்னு ஒவ்வொரு தெருப் பள்ளியிலும் ஜும்மாவில் இமாம் தொண்டை அடைக்கச் சொல்றார். நீங்க என்னன்னா புதுசு புதுசா பிரச்னையைக் கொண்டு வாரீங்க.!'

'போலே! தாய் கிட்ட மன்னிப்புக் கேட்டுட்டுப் போயி ஆயிரம் ரெண்டாயிரத்துல ஒரு ஊட்ட புடிச்சி உம்மாவ உக்காரவை. வீடு வீடா அலைய வச்சி வேலக்காரியாக்கிடாதே! கியாமத்து நாள் வரை தொடரும் உறவு இது. உன் பொஞ்சாதி உன்ன விட்டுப் போயி வேற பொண்ண



**மதியத்திற்கு மேல் ஹாலில் பாய்கள் விரிக்கப்பட்டது. நான்கைந்து சேர்கள் போடப்பட்டது. ஒரு நாற்காலியும், மேஜையும் முன்னால் வைக்கப்பட்டு தண்ணீர் போத்தல்கள் மொத்தமாக முன்னால் வைக்கப்பட்டது. நேரம் செல்லச் செல்ல ஆட்கள் வந்து அமர்ந்தார்கள் ஹால் நிரம்பி விட்டது.**

நீ கட்டலாம். இந்த உம்மாவை விட்டு உனக்கு வேற உம்மா கிடைக்க மாட்டா'

'இன்னைக்கு சாயந்தரம் வயக்காட்டு வேலையாட்களுக்குச் சம்பளம் கொடுக்கணும். அடுத்து என்ன குறை?'

ஒரு பெண்மணி எழுந்து நின்றாள். 'காக்கா எங்க வீட்டுக்காரங்க வரல. நான் தான் வந்துருக்கேன். இங்க வந்து கொற சொன்னது தெரிஞ்சா அடிச்சுப்புடுவாங்க. அதனால அவங்கள தனியா சந்திச்சு கூப்பிட்டு விசாரிங்க.!'

'நீங்க எந்த ஊரு மா? எந்தத் தெரு? எங்களுக்குப் புதுசா தெரியிறீங்களே?'

'எங்களுக்கு நாகர்கோயில். இந்த ஊர்ல வீடு வாங்கி இருக்கோம். இங்கயும் இருப்போம் அங்கயும் இருப்போம்'

'சரி விஷயத்தைச் சொல்லுங்க..'

'இதுவரை யார்ட்ட சொல்லனு தவிச்சுக்கிட்டு இருந்தேன். மாசமானா எங்க வீட்டுக்காரருக்கு 50 ஆயிரம் வருமானம் வருது. ரெண்டு வீடு வாடகைக்கு விட்டு இருக்கார். குடோன் வாடகை கடை வாடகைன்னு நல்லா காசு வருது. ஆனா என் கைக்கு பத்து ரூபாய் காசு தர மாட்டேங்கிறார். அவருக்கு எல்லா வேலயும் பாத்துப் பாத்துச் செய்றேன். என் மகனுக அனுப்பி எனக்குத் தரச் சொல்லும் பணத்தையும் தருவதில்லை. எல்லாப் பணத்தையும் முடிஞ்சு முடிஞ்சு வச்சுக்கிறார்.'

அந்தப் பெண்ணை ஹாஜியார் ஏறிட்டு பார்த்தார். 50 வயசு இருக்கலாம். நல்ல செல்வச் செழிப்புடன் தான் இருந்தாள்.

'உங்க கைச் செலவுக்கு உரிமையோடு அவரிடம் கேட்க வேண்டியதுதானே மா!'

'உனக்கென்ன செலவுன்னு திருப்பிக் கேக்குறார். என்ன வேணும்னு கேளு வாங்கியாரேங்கிறார்'

'நீங்க கேக்குறது எல்லாம் வாங்கித் தராரா?' ஹாஜியார் கேட்க அந்த அம்மா வேகமாகப் பதில் சொன்னாள்.


'எல்லாம் வாங்கித் தருவார். கறி, மீனு, பாலு வீட்டுச் செலவு, சாமான் எல்லாம் வாங்கித் தருவார். முடியாம போனா ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப்போவார். மருந்து மாத்திரை எல்லாம் வாங்கிக் கொடுப்பார்.'

'பொறவென்னமா கொற?'

'என்ன அசுரத்து இப்படிச் சொல்லிட்டீங்க? என் கையில நாலு துட்டு இருந்தா வாசல் வழியில் போற வர சாமான வாங்குவேன். இஷ்டப்பட்ட பொருளை வாங்குவேன். ஒரு நாட்டுக்கோழி முட்டை 25 ரூபாய். நூறு ரூபா இருந்தா நாலு முட்டை வாங்கி தினமும் திம்பேன். டாக்டர் முட்ட திங்கச் சொல்றார். வாசல்ல வர முசாபிர்களுக்குக் காசு கொடுப்பேன்.

'உங்க பொஞ்சாதிக்கு நீங்க கை காசு கொடுப்பதில்லையா?' தன்னை நோக்கி கேள்வி எழுப்பிய பெண்மணியைப் பார்த்து ஹாஜியார் முழித்தார்.

(தொடரும்)



# சூளுரை செய்வோம்!

**- கே.வி. பத்மநாபன்**

கல்வி தனைத் தேடுங்கள்
கற்றே ஒழுங்காய் வாழுங்கள்
கல்வி கற்றல் கட்டாயக்
கடமை என்றார் நபிகள்தாம்!

ஆணா பெண்ணா பேதமில்லை
அறிவுக் கல்வி பொதுவென்றார்;
வாணாள் முடியும் வரையிங்கே
வளர்ச்சி தரும்நற் கல்வியென்றார்

'இக்ரஃ'* என்னும் இறைவசனம்
எல்லோ ருக்கும் பொதுவென்றார்
தக்க கல்வி கற்றதன் பின்
தரையில் தர்மம் செய்யென்றார்

அறியா மைதான் நீங்கிடவும்
அல்லா புகழைப் போற்றிடவும்
குறியாய்க் குர்ஆனை ஓதிடவும்
கொள்வீர் கல்வி என்றுரைத்தார்

கற்ற கல்வி தானம்தான்
காசி னிக்குள் 'சதகா'வாம்**
மற்ற வரையும் நல்வழியில்
மாற்றும் மார்க்கம் என்றுரைத்தார்

நபிகள் எம்மான் அறிவுரையை
நாளும் இங்கே பின்பற்றிச்
சுபிட்ச மாக வாழ்ந்திடவே
சூளு ரையைச் செய்திடுவோம்

* இக்ரஃ - ஓதுவீராக
** சதகா - தர்மம்

இரண்டு படங்களுக்கும் இடையே 5 வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடியுங்கள் குட்டீஸ்



# திருமண மஹராக 313 அறுவை சிகிச்சை



இஸ்லாமியத் திருமணத்தில் வரதட்சணை என்பது கிடையாது. அது தடுக்கப்பட்ட செயல். அதே வேளையில் மணமகன் தான் திருமணம் செய்து கொள்ளவிருக்கும் மணமகளுக்கு மஹர் எனும் திருமணக் கொடையை கட்டாயம் கொடுக்க வேண்டும். அது தங்கமாகவோ, பணமாகவோ இருக்கலாம். அந்தத் தொகையை மணமகள் தான் முடிவு செய்வார்.

ஈரானில் திருமணம் செய்து கொண்ட மருத்துவத் தம்பதியினர் ஓர் உன்னதமான வரலாற்றுச் சாதனையையும் நெகிழ்ச்சியான காரியத்தையும் செய்து உள்ளனர். மணமகள் தனது மஹர் எனும் திருமணக் கொடையாக 313 ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்ற உன்னதமான நிபந்தனையை முன்வைத்துள்ளார்.

மணமகன் ஒரு பொது அறுவை சிகிச்சை நிபுணர்(Surgeon) ஆவார். மணமகள் ஒரு தகுதிவாய்ந்த பெண் மருத்துவர்(Lady Doctor) ஆவார். இருவருமே மருத்துவத் துறையைச் சேர்ந்தவர்கள் என்பதால், சமூகத் திற்கு மருத்துவ ரீதியாக எவ்வாறு உதவலாம் என்று சிந்தித்து இந்த முடிவை எடுத்துள்ளனர்.

இஸ்லாமிய வரலாற்றில் புகழ்பெற்ற பத்ரு போரில் (Battle of Badr) கலந்துகொண்ட முஸ்லிம்களின் எண்ணிக்கை 313 ஆகும். அதனை நினைவுகூரும் வகையில் 313 ஏழைகளுக்கு வாழ்நாளில் இலவசமாக ஆபரேஷன் செய்ய வேண்டும் என மணமகள் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தத் தம்பதியரின் மனிதாபிமானச் செயல் உலகம் முழுவதும் உள்ள சமூக ஊடகங்களில் பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வாழ்த்துகள் மணமக்களே..!

**- ஹக்கீம் யாஸினி**

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

# WE NOW ACCEPT TO PAY & COD BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of
WCA
INTER GLOBAL

044-61266666

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 01 - 15 July 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

Anywhere - Anytime

- Domestic
- International
- Cargo




Send your documents & Parcels through

THE PROFESSIONAL COURIERS

Pro premium (a professional service) › DOMESTIC › INTERNATIONAL › CARGO

BUSINESS ENQUIRY :
No.32, Thiru-Vi-Ka Salai,
Royapettah, Chennai-600014.
Phone: 044-4555 3222
E-Mail: maaro-mkt@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com

SERVICE ENQUIRY :
No.17, Cathedral Garden Road,
Nungambakkam, Chennai-600034.
Phone: 044-6620 2020
E-Mail: maaro@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com

 If undelivered, please return to : Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.